மாலை: 52 பிப்ரவரி 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு





ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலில் 3.2.2010, அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், முக்கிய பிரமுகர்களும் திரளான பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 3.2.2010, அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப. அவர்களும், டாக்டர் நல்லி என். குப்புசாமி செட்டியார் மற்றும் முக்கிய பிரமுகர்களும் திரளான பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2041 மாசி மாதம்
மாலை 52. மணி 2 பிப்ரவரி 2010

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

சிவாயமென்னும் அட்சரம் சிவனிருக்கும் அட்சரம்
உபாயமென்று நம்புவோர்க்கு உண்மையான அட்சரம்
கபாடமிட்ட வாயிலை கடந்து போகும் வாயுவை
உபாயமிட் டழைக்குதே சிவாய ஐந்தெழுத்துமே!
– –சிவ வாக்கியர்.

ஜோதி மயமான அடி முடியில்லாத லிங்க பரம்பொருளுக்கு உரியது கார்த்திகை தீபத் திருவிழா, நடன சிவமான நடராஜருக்கு உரியது ஆருத்ரா தரிசன விழா, பிரம்மா, விஷ்ணுவிற்கு காட்சி தந்த பரஞ்ஜோதி பெருமானாகிய லிங்கோற்பவருக்கு உரிய விழா மகா சிவராத்திரி விழா. மாசித் திங்களில் வரும் இம்மகாசிவராத்திரி விழா நம்மை எதிர்கொண்டழைக்கிறது.

இந்த நன்னாளில் பட்டி தொட்டிகளிலெல்லாம் நம் குலதெய்வங்களைக் கொண்டாடி மகிழும் பாரம்பரியமும் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

இந்த நன்னாளில் நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தினை அருச்சித்தும், நம் குலதெய்வங்களை வழிபட்டும் வாழ்வில் வளம் பெறுவோமாக.

பார் புகழும் பண்ணாரி மாரியம்மனின் அருள் அமுதத் தோற்றத்தினை முன் முகப்பிலும், அருள் செய்து காத்தருளும் அன்னை இருக்கன்குடி மாரியின் அருட்கடாட்சத்தினை உள்முகப்பிலும் கொண்டு இம்மாத இதழ் மலர்ந்துள்ளது.

இடம் பெயர்ந்த விழாவாகக் கொண்டாடப்பட்டு வரும் மாசி மக கடலாட்டு விழாவின் மாண்புகளைத் தொகுத்து இவ்விதழில் வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள்.

ஜீவகாருண்யம், குரு பக்தி, ஞானம், நல்லொழுக்கம், பொறுமை, நல்ல சிந்தனை, அனுஷ்டானம் ஆகிய நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த குணங்கள் அனைத்திற்கும் பிறப்பிடமானவராய் வாழ்ந்த கூரத்தாழ்வாரின் ஆயிரமாவது ஆண்டு பூர்த்தி சிறப்பினை முன்னிட்டு ஆழ்வான் 1000 எனும் தலைப்பில் அவரது சிறப்புகளை சித்தரித்துள்ளார் திரு.எம்.என்.ஸ்ரீனிவாசன் அவர்கள்.

நாடோறும் காலையில் நினைத்த அளவில் பாபம் நீங்கி நினைத்த செயல் நிறைவேறும் பன்னிரு சோதித் தலங்களின் சிறப்புகளில் சில தொகுத்து இவ்விதழில் வழங்கப்பட்டுள்ளது.

சூரபத்மனை வெல்வதற்காக முருகப் பெருமான் சிவ பூஜை செய்த தலமாகவும், விஷ்ணு தூணிலிருந்து வெளிப்படுவதற்கு முன்பு இரண்யாட்சனை வெல்லும் சக்தி பெறுவதற்காக சிவ பூஜை செய்த தலமாகவும் விளங்கிடும் குற்றாலம் குற்றாலநாதரையும், சித்திர சபையின் சிறப்புக்களையும் வழங்கியுள்ளார் பேராசிரியர் சிவப்பிரியா அவர்கள்.

முனைவர் திரு. டி.எஸ்.இராமஸ்வாமி அவர்களின் கண்டேன் கமல மலர்ப்பாதம் எனும் தொடரும், திரு. இராமநாதபிள்ளை அவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர் தொடரும். தொடர்ந்து இவ்விதழில் வெளிவந்துள்ளது.


சேயூர் முருகன் திருத்தலம், முப்பெரும் தேவியர் உடனுறை மும்மூர்த்திகள் திருத்தலமாக விளங்கும் உத்தமர் கோயில் திருத்தலம், துன்பங்கள் நீங்கி நன்மைகள் அருளும் அருள்மிகு லெட்சுமி நரசிம்மர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சோளிங்கர் திருத்தலச் சிறப்புக்கள், திருத்தல உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

வாசகப் பெருமக்கள் தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை வழங்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

ப.ரா. சம்பத்

இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்



# குறளோவியம்

வழக்கம்போல் வள்ளுவர் தம் மாணாக்கனுக்குத் தமிழ் இலக்கணம் கற்றுக் கொடுக்கும் நேரம். அவரது அகன்ற நெற்றியில் தேக்கப்பட்ட சிந்தனைப் பெருவெள்ளம் ஒளிவிழி மடைகளின் வழியாகப் பாய்ந்து கொண்டிருந்தது. அப்போது அழகிய மான் குட்டியொன்று அச்சத்தால் நடுக்குற்றுத் தன் இனத்துக்குரிய இயல்பான வேகத்தை இரட்டிப்பாக்கிய வண்ணம் வள்ளுவரின் குடிலுக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. குறளாரின் பார்வை அந்த இளம் மானின் மீது படுவதற்குள் வில்லும் அம்பும் தாங்கிய வேடன் ஒருவன் விரைந்து வந்து, வள்ளுவருக்கெதிரே நின்றான். "இந்தப் பக்கம் ஒரு மான் ஓடி வந்ததே! கண்டீர்களா? கண்டிருந்தால் சொல்லிவிடுங்கள்: அது என் அம்புக்குத் தப்பிய மான்! ஒருவேளை உமது இல்லத்திற்குள் நுழைந்து விட்டதோ?" என்று பரபரப்புடன் கேட்டான்.

வள்ளுவர் அமைதியாகச் சொன்னார்: "மானா? இந்தப் பக்கம் வரவில்லையே! அதோ; அந்தப் பக்கம் அல்லவா சற்று நேரத்துக்குமுன் ஒரு மான் துள்ளியோடியது."

இந்த பதிலைக் கேட்டதும் வேடன், "அப்படியா?" என்று கூவியவாறு அவர் காட்டிய திக்குநோக்கி ஓடத் தொடங்கினான்.

மாணாக்கன் மிக்க பணிவுடன் வள்ளுவரைப் பார்த்துக் கேட்டான்:

"பெருந்தகையீர்! பொய் கூடாது–அது பெருந்தீது என்று பலமுறை விளக்கியிருக்கிறீர்களே; இன்று தாங்களே அந்த வேடனிடம் ஒரு பொய் கூறினீர்களே, சரிதானா?"

வள்ளுவர், புன்னகை புரிந்தவாறு விடையளித்தார்:

"கேடு இல்லாத நன்மையை விளைவிக்கக்கூடிய பொய்யான சொல், வாய்மை என்று கூறத்தக்க இடத்தை பெற்றுவிடும். நான் வேடனிடம் உண்மையைச் சொல்லியிருந்தால், அந்தப் புள்ளிமான் உயிர் போயிருக்குமல்லவா? நான் கூறியது பொய்யானது எனினும் அது ஒரு நன்மையைச் செய்த காரணத்தால் வாய்மையாகவே கருதப்படும்."


வள்ளுவர் இந்த விளக்கத்தைச் சொல்லி முடித்து விட்டு எதிரேயிருந்த ஏட்டையும் எழுத்தாணியையும்

எடுத்தார். குறள் உருவாயிற்று.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த
புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

அதனைத் தொடர்ந்து மாணாக்கனிடம் கூறினார்:

"இளைஞனே! இந்த விளக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பொய் சொல்லுவதையே வாழ்க்கையாக ஆக்கிக்கொண்டு விடக்கூடாது! ஒருவன் தன் நெஞ்சம் அறிந்த உண்மையை மறைத்துவிட்டு, தன்னைக் காத்துக் கொள்ளவோ அல்லது பிறருக்குக் கேடுசூழவோ பொய் கூறுவானேயானால், அப்படிப் பொய் கூறியவனுடைய நெஞ்சமே அவனைச் சுட்டுப் பொசுக்கிவிடும். அதனைக் குறிப்பிடவே இந்தக் குறளையும் எழுதியிருக்கிறேன்."



"தன்நெஞ் சறிவது பொய்யற்க;
பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

வள்ளுவரின் அருமைமிகு கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்த மாணாக்கன் அவர் கால் மலர் தொழுது நின்று, "வாழ்க வள்ளுவம்" என்று முழங்கினான்.

அதிகாரம்:30 வாய்மை பாடல்கள்:292,293

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

## இதழின் உள்ளே..


| | | |
|---|---|---|
| 1. மாசி மக நீராட்டு | தமிழாகரர் தெ.முருகசாமி | 6 |
| 2. ஆழ்வான் ஆயிரம் | எம்.என்.ஸ்ரீனிவாஸன் | 8 |
| 3. சோதிலிங்கத் தலங்கள் | | 10 |
| 4. ஓவியமங்கையருக்கு உயிர் கொடுத்த குற்றால நாதர் | பேராசிரியர்-சிவப்பிரியா | 15 |
| 5. சேயூர் முருகன் | பனையபுரம் அதியமான் | 17 |
| 6. திருக்கரம்பனூர் அருள்மிகு உத்தமர் கோயில் | | 22 |
| 7. திருமந்திரம் | | 26 |
| 8. உலகம் உய்ய உதித்த உடையவர் | -பெ.ராமநாதபிள்ளை | 28 |
| 9. அருள்தரும் அருவுருவத் திருமேனி(லிங்கம்) | -டாக்டர்.எம்.ஆர்.சந்தானம் | 31 |
| 10.கண்டேன் கமலமலர்ப்பாதம் | -முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி | 34 |
| 11. அருள்மிகு லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர்- | | 37 |

## அருள் செய்து காத்தருள்வாய் இருக்கன்குடி மாரிமுத்தே



# அருள்மிகு மாரியம்மன் 108 போற்றிகள்

1. ஓம் அண்ணாமலையில் அமர்ந்தாய் போற்றி
2. ஓம் அலகு அணிந்தார்க்கு அருள்வாய் போற்றி
3. ஓம் அலர்மேலு மங்கையும் ஆனாய் போற்றி
4. ஓம் அறுகோணத்து உள்ளிருக்கும் ஆதி போற்றி
5. ஓம் அனலும் தணலும் ஆவாய் போற்றி
6. ஓம் அன்னம் அளிக்கும் அன்னமே போற்றி

7. ஓம் ஆதிசிவன்தேவி அம்மையே போற்றி
8. ஓம் ஆதியில் உமையாய் ஆனாய் போற்றி
9. ஓம் ஆயிரம் கண்ணுடை அம்மா போற்றி
10. ஓம் ஆரணிப் பாளையத்து அம்மா போற்றி
11. ஓம் ஆறு தப்பு நூறு பிழை பொறுப்பாய் போற்றி.
12. ஓம் ஆறு ஆதாரமாம் அணங்கே போற்றி.
13. ஓம் ஆற்று மணல் லிங்கம் அமைத்தாய் போற்றி.
14. ஓம் ஈசன் பங்கில் இருப்பாய் போற்றி.
15. ஓம் உடுக்கையில் பாம்பை உயர்த்தாய் போற்றி.
16. ஓம் உன்னைப் பணிந்தவர்களுக்கு உற்ற துணை போற்றி.
17. ஓம் ஊத்துக்காட்டின் உறவே போற்றி.
18. ஓம் எங்கும் நிறைந்த நிறைவே போற்றி.
19. ஓம் எச்சிலும் தீட்டும் ஏற்பாய் போற்றி.
20. ஓம் எட்டெழுத்தாகி இனிப்பாய் போற்றி.
21. ஓம் எல்லா உலகும் ஈன்றாய் போற்றி.
22. ஓம் எல்லார்க்கும் தாயாய் இருப்பாய் போற்றி.
23. ஓம் ஏழையர்க்கு அடைக்கலம் ஆனாய் போற்றி.
24. ஓம் ஒப்பேதுமில்லா உயர்வே போற்றி.
25. ஓம் ஓங்காரமென்னும் உருவே போற்றி.
26. ஓம் கச்சிப்பதியின் காமாட்சி போற்றி.
27. ஓம் கடும்பாடி எல்லையெல்லாம் காப்பாய் போற்றி.
28. ஓம் கடைக்கண் நோக்கம் அருள்வாய் போற்றி.
29. ஓம் கண்ணபுரத்தின் காரணி போற்றி.
30. ஓம் கரகத்தில் அமரும் கருமாரி போற்றி.
31. ஓம் கலியுகம் கண்ட திரிபுரை போற்றி.
32. ஓம் கற்பகம் அருளும் காமதேனு போற்றி.
33. ஓம் கனகசபை நடத்தும் கபாலி போற்றி.
34. ஓம் காசிவன நாட்டிலே கன்னியாகுமரி போற்றி.
35. ஓம் குப்பத்திருக்கும் கொலுவே போற்றி.
36. ஓம் கும்பத்தின் மீதிருந்து கொஞ்சுவாய் போற்றி.
37. ஓம் கைலாசத்தின் காவலே போற்றி.
38. ஓம் கோலியனூரின் கொலுவே போற்றி.
39. ஓம் சந்நிதிக்கெல்லாம் சந்நிதி போற்றி.
40. ஓம் சந்தேகம் நீக்கும் சாயுச்சியே போற்றி.
41. ஓம் சப்தகன்னியாய்ச் சமைந்தாய் போற்றி.
42. ஓம் சமயபுரத்தின் தமிழே போற்றி.
43. ஓம் சாம்பிராணி வாசமாய்ச் சார்வாய் போற்றி.
44. ஓம் சிங்கம் ஏறும் சிறப்பே போற்றி.
45. ஓம் செக்கச் சிவந்த சிங்காரி போற்றி.
46. ஓம் செடிலும் தேருமாய்ச் சிறப்பாய் போற்றி.
47. ஓம் சூலம் ஏந்தும் சுடரே போற்றி.
48. ஓம் சூனியம் எல்லாம் சுடுவாய் போற்றி.
49. ஓம் சேலம் கோட்டைச் சிறப்பே போற்றி.
50. ஓம் தண்டு மாரியாய்த் தழைப்பாய் போற்றி.
51. ஓம் திண்டுக்கல் கோட்டையில் திளைப்பாய் போற்றி.
52. ஓம் திருநீற்றுக்கோட்டை திகம்பரி போற்றி.
53. ஓம் திருவிளக்கின் நாயகத்திறமே போற்றி.
54. ஓம் திருவேற்காட்டு தேவி போற்றி.
55. ஓம் தில்லைவனத்தின் திருவே போற்றி.
56. ஓம் தீராவினையெல்லாம் தீர்ப்பாய் போற்றி.
57. ஓம் தெய்வக்கொலுவில் திளைப்பாய் போற்றி.
58. ஓம் தேசமெல்லாம் முத்தெடுக்கும் தேவி போற்றி.
59. ஓம் தேசவிளக்கெலாம் ஆனாய் போற்றி.
60. ஓம் நம்பினோர் நாவில் நவில்வாய் போற்றி.
61. ஓம் நாகக்கன்னியே நல்லமுத்து போற்றி.
62. ஓம் நாகக்கடையில் நடப்பாய் போற்றி
63. ஓம் நாகம் அணிந்த நங்கை போற்றி.
64. ஓம் நாடும் வீடும் காப்பாய் போற்றி.
65. ஓம் நாற்கோணச் சக்கரத்தை நாடுவாய் போற்றி.
66. ஓம் நித்தியகல்யாணி நீலிபரஞ்சோதி போற்றி.
67. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி.
68. ஓம் நோவுநொடிக்கோர் மருந்தே போற்றி.
69. ஓம் பகைத்தவர் மார்பைப் பிளப்பாய் போற்றி.
70. ஓம் படவேட்டில் அமர்ந்த பராசக்தி போற்றி.
71. ஓம் பட்டத்தழகி படைமுகத்தாய் போற்றி.
72. ஓம் பண்ணாரி வாழும் பராபரி போற்றி.
73. ஓம் பாதாளம் எல்லாம் பரந்தாய் போற்றி.
74. ஓம் பார்வதியாகிப் பரிந்தாய் போற்றி.
75. ஓம் பாவாடைக்காரி பராபரியே போற்றி.
76. ஓம் பில்லி பிசாசுகள் அகற்றுவாய் போற்றி.
77. ஓம் பிள்ளை வரம் தரும் பெரியாய் போற்றி.
78. ஓம் புவனமெல்லாம் போற்றும் பூவழகி போற்றி.
79. ஓம் பூரணமாகிய பொலிவே போற்றி.
80. ஓம் பூவாய்ச் சொரியும் புதுமையே போற்றி.
81. ஓம் பெரிய பாளையத்தின் பேச்சியே போற்றி.
82. ஓம் பெருமாளின் பின்னே பிறந்தாய் போற்றி.
83. ஓம் மக்களுக்கு உகந்த மாதரசி போற்றி.
84. ஓம் மகுடமுடி கொண்ட மனோன்மணி போற்றி.
85. ஓம் மங்கை உருவின் மகராசி போற்றி.
86. ஓம் மணிமந்திர சேகரித்தாயே போற்றி.
87. ஓம் மணிவிளக்கு மேல் ஏறும் மாதா போற்றி.
88. ஓம் மலையனூர் மகிழ்ந்த மாண்பே போற்றி.
89. ஓம் மலையாள தேசத்து மகமாயி போற்றி.
90. ஓம் மழையாய் விளங்கும் மாரி போற்றி.
91. ஓம் மாங்கல்யம் காக்கும் மங்கலி போற்றி.
92. ஓம் மாயி மகமாயித்தாயே போற்றி.
93. ஓம் முக்கோணத்துள் மூலப்பொருளே போற்றி.
94. ஓம் முத்துவடம் அசையும் முலைப்பால் போற்றி.
95. ஓம் மூலாதாரத்தின் முதல்வி போற்றி.
96. ஓம் யாதும் ஆகி நின்றாய் போற்றி.
97. ஓம் வணங்குவோர்க்கு வாழ்க்கை அளிப்பாய் போற்றி.
98. ஓம் வந்தமனை வாழ வருவாய் போற்றி.
99. ஓம் வருத்தம் தீர்க்கும் வளமே போற்றி.
100. ஓம் வலியோர் மார்பைப் பிளப்பாய் போற்றி.
101. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி.
102. ஓம் வாதபித்த சீதசுரம் காப்பாய் போற்றி.
103. ஓம் வார்ப்புச் சிலையாய் வருவாய் போற்றி.
104. ஓம் வீராம்பட்டணத்து விளக்கே போற்றி.
105. ஓம் வெள்ளிக்கிழமை விளைவே போற்றி.
106. ஓம் வேப்பம் பாலாய் விளைவாய் போற்றி.
107. ஓம் வேப்பிலை செய்யும் விந்தையே போற்றி.
108. ஓம் வேம்புரதம் ஏறும் வித்தகி போற்றி போற்றி.

அந்தந்த திருத்தலத்திற்குச் சிறப்பாக உள்ள அருள்மிகு மாரியம்மன் பாடலுடன் 108 போற்றியை நிறைவு செய்திடல் வேண்டும்.

# மாசி மக நீராட்டு


'கயிலையே மயிலை' என்ற சிறப்புத் தொடர் அன்னை கற்பகாம்பாள் உடனுறை சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலுக்கான ஓர் உயர்ந்த வாசகமாகும். சிவபெருமானது கட்டளையால் அம்பிகை கயிலையில் இருந்து வந்து மயிலாய்த் தோன்றிப் பூசித்துப் பேறு பெற்ற தெய்வீகச் சிறப்பால் கயிலையே மயிலை என்ற பெருஞ்சிறப்பு மயிலாப்பூருக்குக் கிடைத்தது.

இத்திருக்கோயிலுக்கான பல்வேறு சிறப்புக்களுள் திருஞான சம்பந்தர் பாடிய மட்டிட்ட புன்னை என்ற தேவாரப் பதிகம் மிகவும் சிறப்புக்குரியதாகும். இப்பதிகத்துள் இத்திருத்தலத்தில் நடைபெறும் பன்னிரண்டு திங்கள் திருவிழாப் பொலிவுகள் பதிவாகியுள்ளன. அவற்றுள் மாசித் திங்கள் கடலாடு விழாவும் ஒன்று.

மடலார்ந்த தெங்கின்
மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான்
கபாலீச்சரம் –என்ற

இப்பாடலால் எல்லாத் திருவிழாக்களும் திருக்கோயிலுக்கு ஒட்டிய நிலையில் நடந்தாலும் மாசி மகத்தன்று மட்டும் இடம் பெயர்ந்த விழாவாக அமைந்த குறிப்பு உணரப்படுகிறது.

திருக்கோயிலுக்கு வந்து வணங்க இயலாதவர்களுக்கு



அருள் புரிவான் வேண்டி தாமே எழுந்தருளி அருள் பாலிப்பதை இடம் பெயர்ந்து நடத்தப் பெறும் விழாக்களால் உணரலாம். இத்தகு நீராட்டு விழாவைச் சமயப் பெரியவர்கள் தீர்த்தவாரி விழா என்றனர். வாரி என்பது கடல், தாகத்தைத் தீர்ப்பது தீர்த்தம், அருள் கிட்டுமா என அருள் தாகத்தோடு இருக்கும் ஆன்மாவின் ஏக்கத்தைத் தீர்த்து வைப்பதும் தீர்த்தம் ஆனது.

**தமிழாகரர் தெ.முருகசாமி, புதுச்சேரி-9.**

இறைவன் தீர்த்தமாகவே உள்ளவன். அதைத் தான் மாணிக்கவாசகர், ''நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" எனத் திருவெம்பாவையில் கூறினார். மேலும் சிவபுராணத்தில் "ஆற்றின்ப வெள்ளமே" என்றார். ''எங்கள் பிராட்டியும் எங்கேனும் போன்றிசைந்த பொங்கு மடு'' என்றும் திருவெம்பாவையில் கூறினார். தேங்கிக் கிடக்கும் நீரானாலும் ஓடிக் கொண்டே இருக்கும் ஆற்று நீரானாலும் தீர்த்தம் என்ற தெய்வீகச் சிறப்புடையவன் இறைவன் என்பது மணிவாசகரின் வாக்கால் உணரப்படும் கருத்தாகும்.

மணிவாசகர் குறிக்கும் ஆறும் மடுவும் போல் இறைவன் கங்கு கரை காணாத கடலாகவும், உள்ளதால் அவன் கடலார் அமுதே என்று கடலாகவும் உருவாக்கப்பட்டான். இங்ஙனம் குறிக்கப்படும் தரை சார்ந்த ஆறு, மடு போன்றவற்றின் நீருக்கும் கடல் நீருக்கும் அடிப்படையில் ஓர் இன்றியமையாத வேறுபாடு உண்டு.

ஆறும் மடுவும் உப்புத் தன்மையற்ற நீரை உடையன. கடலோ உப்புத் தன்மையான நீர்மை உடையது. உணவுப் பொருளுடன் உப்பு சேர்வதால்தான் உணர்வு அறியப்படுகிறது. இவ்வுப்பு கறிப்பு என்ற பொருளில் உணவுடன் சேர்ந்தாலும், உடலுக்கு உணர்வைத் தரும் மூலப் பொருள் என்பதால் உப்புக்குச் சுவை என்ற சிறப்புப் பொருள் அமைந்தது. அய்யன் திருவள்ளுவர்,

**நட்பிற் குறுப்புக் கெழுதகைமை**
**மற்றதற்கு,**
**உப்பாதல் சான்றோர் கடன் (802)**

என்ற குறளில் உப்புக்குச் சுவை என்ற பொருளைப் பதிவு செய்துள்ளார். எனவே, உணர்வைத் தருதலும் சுவையைக் கூட்டுதலுமான உப்புடைய கடலைப் போன்ற இறைவனும் அருளுணர்வையும், அருட்சுவையையும் தரவல்லன் என்பதால் அந்த இறை இன்ப நீராட்டில் குளிப்பதன் அடையாளமாகவே மாசி மக நீராட்டு அமைந்தது எனலாம்.

இக்கடலாட்டு விழா, கடற்கரையை ஒட்டிய மயிலாப்பூர் போன்ற திருத்தலங்களில் மட்டும் நடைபெறுவதன்று, கடற்கரைக்கு அப்பால் உள்ள திருத்தலங்களில் இருந்து கடவுள்களை எழுந்தருச் செய்வதன் மூலமும் இக்கடலாட்டு விழாவின் சிறப்பை அறியலாம். 80 கி.மீ., தூரத்தில் உள்ள திருக்கோவலூரில் இருந்து மாசி மகப் பௌர்ணமியில் உலகளந்த பெருமாள் கடலூர் தேவனாம்பட்டினக் கடற்கரைக்குத் தீர்த்தவாரிக்காக எழுந்தருளுவதை ஆண்டாண்டு தோறும் காணலாம்.

இவ்வாறே புதுச்சேரிக் கடற்கரைக்கு அப்பாலுள்ள மயிலம், தீவனூர், செஞ்சி முதலிய ஊர்களில் இருந்து முருகன், விநாயகர், ரங்கநாதர் போன்ற கடவுளர்கள் கடலாட்டுக்குப் புதுச்சேரிக்கு எழுந்தருளும் விழாவானது புதுச்சேரிக்கே சிறப்பை சேர்க்கும் பெருவிழாவாக உள்ளது.

இவற்றுள் மயிலம் முருகன் இங்ஙனம் எழுந்தருளுவதைப் பாவேந்தர் பாரதிதாசன் தாம் பாடிய மயிலம் சுப்பிரமணிய துதியமுதில் பதிவு செய்துள்ளார்.

இக்குறிப்பு மன்னர் மன்னன் எழுதிய கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல் என்ற நூலில் காணப்படுகிறது. கடலாட்டு விழாவை ஞான சம்பந்தர் மயிலையில் பதிவு செய்தது போன்ற பதிவுதான் பாவேந்தரின் மயிலம் முருகன்

மாசி மகோஸ்வ மாமிந்த நாள் எங்கள்
மாம யிலாசலனே வந்தனன்

என்றும்,

"பாசி மயில்மிசை மாசி மகத் தன்று
நேசிய ருடன்நீ வந்தனை" என்றும்,
"பல்லக்கில் ஏறிவரின் பல நாழிகை கழியும்
வில்லில் தொடுசரம் போல் விரைந்து
பறந்துவரும்,
மயிலேறி வரச்செய்குவாய் – எழில்
, மதுகரமே குமரனை நீ!"

என்றும் பாவேந்தர் பாடுவது புதுச்சேரியில் நடக்கும் கடலாட்டு விழாவுக்கான இலக்கியச் சான்று எனலாம்.

கயிலையே மயிலை என்ற தெய்வீகச் சிறப்பு சென்னை மயிலாப்பூருக்குக் கிட்டியது போல மயிலத்துக்கும் அப்பெருமை உண்டு. சிவ பெருமான் சிவஞான பாலய சுவாமிகள் என்னும் பெயருடன் வீர சைவத் திருமடத்தின் மகா சந்நிதானமாக அவதாரம் செய்ததை அம்மடாலயச் சீடர் சிவப்பிரகாச சுவாமிகள்,

**கயிலை மலை மீதிருக்கும் காட்சிபோல்**
**வந்து**
**மயிலை மலை மீதிருக்கும் வள்ளல்**

எனப் போற்றுகிறார்.

ஆகக் கயிலையே மயிலை என்ற சிறப்பை ஒரு சேரப் பெற்ற மயிலாப்பூரும் மாமுருகனது மயிலாடும் மாசி மகக் கடல் நீராட்டு விழாவால் பொலிவுபெறும் திருத்தலங்களாகும் என உணர்ந்து, எண்ணி இறையருள் பெறுவோமாக!

# ஆழ்வான் – 1000



காஞ்சி மாநகரின் வடமேற்கு திசையில் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கூரம் என்ற அழகிய கிராமத்தில் கி.பி.1010ம் ஆண்டு (கலி 4109 ம் ஆண்டு) தமிழ் ஸௌம்ய வருஷம் தை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தவர் கூரத் தாழ்வான் என்ற மஹனீயர். இவர் ராமானுசரின் முக்கிய சீடராகத் திகழ்ந்து நாம் அனைவரும் கடை பிடிக்க வேண்டிய சிறந்த குணங்களான ஜீவகாருண்யம் அதாவது எல்லா உயிர்களிடத்தும் தயவுடனும் அன்புடனும் இருக்கும் தன்மை கொண்டவராகவும் குருபக்தி, பகவானிடத்தில் பக்தி வைராக்யம் (திடநம்பிக்கை) ஞானம் நல்லொழுக்கம், பொறுமை, நல்லசிந்தனை நல்ல அனுஷ்டானம் (பிறர்க்கு உபதேசம் செய்வது மட்டுமல்லாமல் தானும் கடை பிடிப்பது) ஆகிய அனைத்துக்கும் பிறப்பிடமானவராய் வாழ்ந்து வந்தார்.

திருமாலுக்கு திருமார்பில் ஒரு மறு உள்ளதைப்போல இவருக்கும் மார்பினில் ஒரு மறு இருந்ததால் (ஒரு மச்சம் அல்லது வடு) இவருக்கு திருவறுமார்பன் என்ற பெயர் வைத்தனர் பெற்றோர்கள். இவரின் தகப்பனார் பெயர் அனந்தர் என்ற கூரத்தாழ்வார். ஆகும். மரியாதைக்காகவும் கூரத்தாழ்வான் கூரத்தாழ்வார் என்று குறிப்பிடக் கூடாது. என்பது வைணவ சம்பிரதாயம். அப்படி குறிப்பிட்டால் அது ஆழ்வானின் தகப்பனாரையே குறிக்கும். ஆழ்வானை குறிக்காது. சிறுவயதிலேயே வேதம் இதிஹாஸம் புராணங்கள் ஆழ்வார்களின் திவ்யமான பாஸுரங்கள் இவருக்கும் முன்பாக தோன்றிய பல குருமார்களின் ஸ்தோத்திரங்கள் என்று அனைத்திலும் கற்றுதேர்ந்தவரானார். பெருமானே ஆழ்வானாக அவதரித்தமையால் இவரது ஞானத்தைப் பற்றியோ அழகைப்பற்றியோ அரச குலத்திலே பிறந்ததால் இவரின் செல்வ செழிப்பைப் பற்றி விரிவாக குறிப்பிட வேண்டியதில்லை என்றபோதும் ஆழ்வான் எவ்வித குலகர்வம், தன கர்வம், வித்யாகர்வம் மூன்றும் அற்றவராய் திகழ்ந்தார். இவரின் அரண்மனையில் எப்போதும் அன்னதானத்திற்கு முக்கிய இடம் இருந்து வந்தமையால் கூரம் போன்ற அமைதியான கிராமத்திலும் கூட இவரின் திருக்கோவில் வைபவங்களில் அன்னதானம் இன்றளவும் சீரிய முறையில் நடந்து வருவது கண்கூடு. சில காலம் தமது தந்தைக்குப்பின் கூரம் நாட்டை ஆட்சிபுரிந்து வந்த இவர் பிரம்மசர்யத்தை



கடைபிடித்து வந்த போதிலும் சில சந்தர்ப்பங்களால் இவருக்கு மண வாழ்க்கை அமைந்துவிட்ட போதிலும் இவர் வாழ்நாள் கடைசி வரை நைஷ்டிக பிரம்மசாரியாகவே வாழ்ந்து வந்தார்.

இராமானுசரை சரணடைந்த ஆழ்வானும் அவரது மனைவியார் ஆண்டாள் அம்மையாரும் ராமானுசருக்கு பணி செய்வதே தங்கள் வாழ்க்கையாக அமைத்துக் கொண்டனர். இவரின் விருப்பத்திற்கேற்ப ஆண்டாள் அம்மையார் நடந்து கொண்டு இருந்தது இவரின் அதிர்ஷ்டமே. ஸ்ரீரங்கத்தில் இருந்தபோது அரங்கனின் அருளால் இத்தம்பதிகளுக்கு இரண்டு குமாரர்கள் அவதரித்தனர். ராமானுசரின் கட்டளைப்படி அவருக்குப் பிறகு வைணவத்தை வளர்த்தவர்களாக ஆழ்வானின் குமாரர்கள் பராஸர பட்டரும் வேத வியாசபட்டரும் விளங்கினார்கள். ராமானுசரை காப்பதற்காக தன் கண்களையே இழந்தார். பிற்காலத்தில் ராமானுசரின் அருளால் காஞ்சிப் பேரருளாளன் ஆழ்வானுக்கு கண்பார்வை அருளினார். பகவத் ராமானுசருடன் காஷ்மீரம் சென்று ராமானுசர் ஸ்ரீ பாஷ்ய கிரந்தத்தை எழுதிட மிகவும் உதவியாய் இருந்தார்.

இறுதிக் காலத்தில் திருவரங்கன் மூலம் இவருக்கு மோட்ச சாம்ராஜ்யத்தை அளித்தபோதும் பகவத் ராமானுசருக்கு உயிராபத்து ஏற்படக் காரணமாயிருந்த "நாலூரான்" என்பாருக்கும் மோஷம் அருள அரங்கனிடம் வேண்டி வரம் பெற்றார். அரங்கனிடம் வரம் பெற்றதில் ஓர் முக்கிய அம்ஸம் ஆழ்வான் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மோட்சம் என்ற வரம். அதனால் ராமானுசருக்கு முன்னதாகவே சுமார் 8 வருடம் முன்பாகவே இறைவனுடன் இணைந்தார். முன்னதாக ராமானுசர் இது பற்றி ஆழ்வானிடம் விசாரித்தபோது தங்களை பரமபதத்தில் எதிர்கொண்டு வரவேற்கவே இவ்வாறு வரம் கேட்டதாகக் கூறி ராமானுசரை அமைதிப் படுத்தினார். இவருடைய வைபவங்களை எழுதிமாளாது. ஆழ்வானுடன் ஒப்பிடக் கூடியவர்களும் இவரைக் காட்டிலும் உயர்ந்தவர்களும் முன்னும் பிறக்கவில்லை. இனியும் பிறக்கப் போவதில்லை. கூரத்தாழ்வானே தற்போதுள்ள சூழ்நிலையில் மீண்டும் அவதரித்தாலும் முன்புபோல மீண்டும் வாழ்ந்து காட்ட முயுமா என்பது சந்தேகந்தான்.

இப்படி பரமபதத்தை அடைந்த நிலையிலும் அர்ச்சாவதார நிலையில் கோயில்களில் காட்சியளித்து அருள்பாலித்து வரும் ஆழ்வானுக்கு இவ்வருடம் ஆயிரமாவது ஆண்டு பூர்த்தி வைபவம் 25.1.2010 முதல் 3.2.2010 வரை "கூரம்" என்ற இவரின் அவதாரத்தலத்தில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அன்பர்கள் அவர் வாழ்ந்து காட்டியபடி வாழ்வதற்கு உறுதி எடுத்துக் கொள்வதே ஆழ்வானுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

படைப்பும், படங்களும்
எம்.என்.ஸ்ரீனிவாஸன்


# சோதிலிங்கத் தலங்கள்

இறைவன் அறிவுமயமாக, அறிவே உருவாக உள்ளவன். அறிவு ஒளி வடிவமாக இருப்பது. ஆகவே, நம் ஆன்றோர்களும் சான்றோர்களும் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய் இறைவனைக் கண்டு அனுபவித்தனர்; நமக்கும் அறிவித்துள்ளனர். ஆண்டவன், ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றிய நிகழ்ச்சியைச் சிவ மகா புராணமும், ஏனைச் சிவ புராணங்களும் கூறுகின்றன. இங்ஙனம் இறைவன் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய இடமே திருவண்ணாமலை. அவ்வண்ணாமலை இன்னும் செம்மை நிறத்துடன் செம்மாந்திருப்பதே சிறந்த சான்று. இதே வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குபவை தாம், துவாதச சோதிலிங்கத் தலங்கள், துவாதசம் – பன்னிரண்டு, பன்னிரண்டு தலங்கள் என்பது இதன் பொருளாகும். சோமநாதம், மல்லிகார்ச்சுனம், உச்சயினி, மகர்காளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்காரம், இராமேசுவரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், குசுமேசம் என்பன பன்னிரு சோதி லிங்கத் தலங்களாகும்.

**1. சோமநாதம்:**

குஜராத் மாநிலத்தின் கத்தியவார்த் தீப கற்பகத்தின் தென்கரையில் அமைந்த பட்டினமாக விளங்குவது சோமநாதம். பன்னிரு சோதி லிங்கத் தலங்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்புமிக்கது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இக்கோயில் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டோர் முற்பிறப்பை உணர்வர். பிரதான லிங்கம் பூமிக்கடியில் மறைவாக உள்ளது. இரண்யா முதலிய ஐந்து நதிகள் சோமநாத்திற்கு அருகில் பாய்கின்றன. முத்தியளிக்கும் ஏழு தலங்களுள் முக்கியமானது இது.

சோமன் எனப்படும் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தியதனால் தட்சனால் சாபம் பெற்றான். சாப நீக்கம் பெறுவதற்குப் பிரமதேவன் கட்டளைப்படி இத்தலத்தில் சிவபெருமானைக் குறித்துப் பத்துக் கோடி முறை 'மிருதயுஞ்சய' மந்திரத்தைச் செபித்தான். சிவபரம் பொருள் வெளிப்பட்டுச் சந்திரனாகிய சோமனுக்கு வளரவும், தேயவும் அருள் வழங்கினார். சோமன் அருள் பெற்ற தலமாதலின் சோமநாதம் எனப் பெற்றது. சோமவாரத்தில் வரும் அமாவாசை இரவும், சிவராத்திரியும் இத்தல வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப்படுகின்றன.



சோமநாதர் ஆலயம்

**2.மல்லிகார்ச்சுனம்:**

அர்ச்சுனம் – மருத மரம். குப்த பரம்பரையில் வந்த இளவரசி சந்திரவதி என்பவள், மல்லிகை மலர் கொண்டு இங்குள்ள இறைவனைப் பூசித்தமையாலும், அர்ச்சுன விருட்சம் (மருத மரம்) தல விருட்சமாக இருப்பதாலும், மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் பெற்றது இத்தலம். இது ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனம் எனவும், தேவாரத்துள் திருப்பருப்பதம் எனவும் வழங்கப்படுகிறது. இது பாரத நாட்டின் நடுவிடமாகிய ஆந்திர மாநிலத்தில் உள்ளது.



அருள்மிகு மல்லிகார்ஜுனர்


ஞானசம்பந்தர் 'சுடுமணி உமிழ் நாகம்' எனத் தொடங்கும் பதிகத்தாலும், நாவரசர் 'கன்றினார் புரங்கள் மூன்றும்' என்னும் பதிகத்தாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'மானும் மரையினமும்' எனத் தொடங்கும் பதிகத்தாலும் போற்றி வழிபட்டு உள்ளனர்.

நந்தி எம்பெருமான் பர்வத (மலை) வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்குவதால் பருப்பதம் எனப் பெற்றது. உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கே முதலில் திருமணம் என விநாயகருக்கும், முருகனுக்கும், பெருமானும், பிராட்டியும் ஒரு போட்டி அமைத்தனர். விநாயகர் அம்மையப்பரை 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்ற கருத்தோடு ஏழு முறை வலம் வந்து போட்டியில் வெற்றி பெற்றுச் சித்தி, புத்தி இருவரையும் திருமணம் புரிந்து கொண்டார். உலகம் முழுவதும் சுற்றி வந்த முருகன் விநாயகர் வெற்றியுள்ளது கண்டு சினமுற்றவராய்க் கிரவுஞ்சகிரிக்குச் சென்று பிரம்மசாரியாய் வாழ்கின்றார். தாய், தந்தையர் தேடி வந்தனர். வருவதை அறிந்த முருகன் மேலும், அப்பாற் செல்ல, தேவர்களின் வேண்டுகோள்படி மூன்று யோசனை தூரத்தில் தங்கினார். இவரைத் தேடி வந்த அம்மையப்பர் தங்கிய இடமே ஸ்ரீசைலம் என வழங்கப்படுகிறது.

இது கயிலை மலைக்குச் சமமாக எண்ணப்படுகிறது. அமாவாசையில் சிவனும், பௌர்ணமியில் அம்மையும் குமரனைச் சென்று கண்டு மகிழ்கின்றனர் என்பது ஐதிகம்.

**3. மகாகாளம்:**

உச்சயினி என்பது ஏழு மோட்சத் தலங்களுள் ஒன்று. அஃது அவந்திகா எனப்படுவது. இது மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள சோதி லிங்கத் தலமாகும். இத்தலம் பண்டைக் காலத்தில் அமராவதி அவந்திகா என வழங்கியது. மாளவதேயத்தின் தலைநகர். விக்கிரமாதித்தனும், அவனுக்கு எதிரியாகிய சாலிவாகனனும் தோன்றிய இடம். இவ்விருவர் பெயராலும் சகாப்தங்கள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காளிதாசர், தண்டி முதலிய புலவர்கள் வாழ்ந்த இடம். இரு காளி கோயில்கள் இங்கே சிறப்புறத் திகழ்கின்றன. மகா காளருடைய திருக்கோயில் சிப்ரா நதிக்கரையில் அமைந்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் கும்பமேளா இங்கே தான் நடக்கிறது.





மகாகாலர் ஆலயம்

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணனுடைய குமாரர்கள் நால்வரும், சிவ பூஜை சிறப்பாலும் நல்லொழுக்கத்தாலும் அந்நாட்டை வளமுடைய தாக்கினர். அப்பொழுது, இரத்தினமாலா என்னும் மலையில் இருந்து வந்து தூஷணன் என்ற அரக்கன், எங்குமே நன்மை நடக்கவொட்டாது தடுத்தனன். பல ஊர்களிலும் உள்ள அந்தணர்கள் ஒன்று கூடிப் வேதப் பிரியனின் குமாரர்களோடு சேர்ந்து, இவ்வரக்கனை அழிக்க இயலாது என்று கருதியவர்களாய் நாள்தோறும் பார்த்திபை பூஜை செய்து வந்தனர். அவர்கள் நாள்தோறும் பூஜை செய்வதற்கு மண் எடுத்த இடம் பெரிய குளமாக ஆயிற்று. அந்தணர் யாவரும் பூஜை புரிந்து தியானத்தில் இருக்கும் போது, தூஷணன் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அப்பொழுது அக்குளத் தினின்றும் மகா காளேசுவரர் தோன்றி அரக்கனை அழித்து அவர்களைக் காத்தார். அவர்களின் வேண்டுகோளின்படி சிப்ரா நதிக்கரையில் பெருமான் எழுந்தருளினார்.

**4.ஓங்காரம்:**

நர்மதா நதியும் காவேரி எனப்படும் நதியும் சங்கமமாகி ஓடி வரும் அமைப்பு ஓங்கார வடிவமாக உள்ளதால், இத்தலம் ஓங்காரம் எனப் பெற்றது. மத்தியப் பிரதேசத்தில் நர்மதை நதிக் கரையில் அமைந்துள்ளது. நர்மதா நதியில் பல நிறமுள்ள பாண லிங்கங்கள் கிடைக்கின்றன. கங்கையாற்றின் இடக்கரை மட்டுமே புனிதமானது என்பர். ஆனால், நர்மதையின் இரு கரைகளுமே


ஓம்காரேஷ்வரர் ஆலயம்


வைத்யநாதர் ஆலயம்

புனிதமானவை என்று கூறுவர். இப்புண்ணிய நதி, இத்தலத்தில் பிரணவ வடிமாக ஓடுவது சிறப்பாகும். விநாயகர் ஐந்து முகத்துடன் காட்சியளிக்கிறார். விந்தியமலை, மேருமலை போல் சிறப்பு வேண்டி, நாரதர் சொற்படி சிவபூஜை செய்யக் கருதி, ஓங்கார ரூபமாய் ஓர் எந்திரம் அமைத்துப் பார்த்திலிங்க பூஜை ஆறு மாத காலம் இயற்றி வரம் பெற்றது. இதுவே ஓங்காரசுவரம் ஆயிற்று என்பர்.

**5.வைத்தியநாதம்:**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் தேவ்கர் வைத்தியநாதர் ஆலயம் உள்ளது. மாபெருந் தூண்களுடன் மர வேலைப்பாடு மிக்கதாகச் சிறந்து விளங்குவது இக்கோயில். தென்னாட்டில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வைத்தியநாதர் ஆலயத்தைப் போலவே முடி இறக்குதல், மாவிளக்குப் போடுதல் முதலிய பிரார்த்தனைகளை மக்கள் இங்கே நிகழ்த்துகின்றனர். சாமகானம் இசைத்துச் சிவருனள் பெற்ற இராணவன், அவரிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்று இலங்கைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டான். இயலாமையினால் சிவபெருமானிடம் முறையிட, அதனை அவர் இரு பிளப்பாக்கிக் காலடியில் வைத்துச் செல்ல அருளினார். அவ்வாறு தூக்கிச் சென்ற இராணவன் இத்தலத்திற்கு வந்தவுடன், அருகில் நின்ற சிறுவனிடம் காவடியைக் கொடுக்க, சிறுவனாக வந்த விநாயகர் காவடியைக் கீழே வைத்து மறைந்தார். முற்பகுதிப் பிளப்பு கோகரணத் தலமாகவும், பிற்பகுதிப் பிளப்பு இத்தலமாகவும் விளங்கலாயின.

**6.பீமசங்கரம்:**

இத்தலம் மகாராட்டிர மாநிலத்தில் மும்பையிலிருந்து 60 கல் தொலைவில் உள்ளது. பீமாநதி இவ்வாலயத்தின் அருகில் உற்பத்தியாகிறது. இங்கே இலிங்கமூர்த்தி ஒரு முழ உயரத்தில் காட்சி தருகிறார். கும்பகர்ணனுக்கும் கற்கடி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன் என்ற அசுரன், பிரியதர்மன் என்ற அரசனின் சிவபூஜையைத் தடுத்து அவனைக் கொல்ல முயன்றபோது, சிவ பெருமான் அவ்வரசன் பூசித்த மண்ணாலாகிய சிவலிங்கத்தில் இருந்து


பீமாசங்கரர் ஆலயம்


வெளிப்பட்டு, பீமனைச் சங்கரித்து, தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சாந்தமூர்த்தியாகப் பீமசங்கரர் என்ற பெயரில் விளங்குகிறார். பீமனைச் சங்கரித்ததால் பீமசங்காரம் என்ற பெயர் பெற்றது இத்தலம்.

**7.இராமேஸ்வரம்:**

தமிழ் நாட்டின் தென் பகுதியில் வங்கக் கடலில் அமைந்த ஒரு சிறு தீவாக உள்ளது இத்தலம். கடல் நீராட்டு இத்தலத்திற்கு சிறப்பு மிக்கது. ஆலயத்துள் பதினான்கு தீர்த்தங்களுக்கும் மேல் உள்ளன. எல்லாவற்றிலும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்பு வாய்ந்தது. காசி யாத்திரை செய்தவர்கள் இராமேசுவர யாத்திரை செய்தால்தான் யாத்திரை நிறைவு பெற்றுப் பயனடைகின்றனர் என்பது ஐதீகம். நமது தமிழ் நாட்டிலுள்ள சோதிலிங்கத்தலம் இது ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது. ஞானசம்பந்தரும், நாவரசரும் பாடியுள்ள நன்மை மிக்க தலம். ஆலயம் மிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய பிரகாரத்தை உடையது. இராவணனைக் கொன்ற பழி நீங்குவதற்குக் கழுவாயாக இராமன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட சிறப்புடையமையின் இராமேசுவரம் எனப் பெயர் பெற்றது. இராவணனை அழிப்பதற்கு முன்பு அவனை அழிப்பதற்காகவே இங்குள்ள இறைவனை இராமன் வழிபட்டு அருள் பெற்றார் என்பதும், மற்றொரு வரலாறாகும்.

**8.நாகேசம்:**

மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது நாகேசம் என்னும் இத்தலம். சிவலிங்கத்தின் கோமுகம் கிழக்கு முகமாக இத்தலத்தில் திரும்பியுள்ளது. நாமதேவ சுவாமிகளின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகச் சிவபிரான் இவ்வாறு திரும்பியுள்ளார் என்பது ஐதீகம். சிவலிங்கம் ஒரு மலைக் குகைக்குள் இடம் பெற்றுள்ளது. மோகினி வடிவங்கொண்ட திருமாலும், பிட்சாடனர் வடிவங் கொண்ட சிவபெருமானும், தாருகாவனம் சென்ற வரலாறு இத்தலத்தோடு தொடர்பு ஏற்படுத்திப் பேசப்படுகிறது. அயோத்திக்கு அருகில் உள்ள சரயூ நதிக் கரையில் நாகேசுவரர் என்ற பெயரோடு ஒரு சிவலிங்கம் உண்டு. இதனையே நாகேசம் எனச் சிலர் கூறுவர். ஆனால், வரலாற்றுப்படி ஔண்டாவில் உள்ள சிவலிங்கமே சோதிலிங்கம் என உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.



நாகேஷ்வரர் ஆலயம்

**9.விசுவேசம்:**

வருணை, அசி என்ற இரு நதிகளின் சங்கமத்திற்கு இடையில் உள்ளதால் இத்தலம் வாரணாசி எனப்பட்டது. கர்மங்களைப் போக்குவதாலும், சிவஞானத்தால் உயிர்கள் ஒளி பெறுவதாலும், காசி என்று இது பெயர் பெற்றது. இது உத்தரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. முத்தி தரும் தலங்களில் இதுவும் ஒன்று. கங்கை இத்தலத்தில் உத்தரவாகினியாக (வடக்கு நோக்கி)ச் செல்கிறது. இவ்வாறு செல்வது சிறப்புடையதாகும். கங்கையின் மேற்குக் கரையில் விசுவநாதர் ஆலயமும், கேதாரநாதர் ஆலயமும் சிறப்புடையவை. வருணை, அசி என்ற இரு நதிக்கும் இடையில் 64 தீர்த்தக் கட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மணிகர்ணிகா கட்டம் மிகச் சிறந்துள்ளது. அன்னபூரணி, விசாலாட்சி, கால பைரவர், துண்டிராச கணபதி முதலிய மூர்த்திகளுக்குத் தனித்தனியே கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் இறப்பவர்கள் முத்தி பெறுவர் என்பது வரலாறு.

**10.திரியம்பகம்:**

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக்கில் இருந்து தென் கிழக்கில் 18 கல் தொலைவில் உள்ளது இத்தலம். பிரமகிரி என்ற மலையைச்

சார்ந்துள்ளது இத்தலம். அம்மலையில் கோதாவரி, அகல்யா, வைதர்ணா, மேற்கு நோக்கிச் செல்லும் கங்கை ஆகியவை உற்பத்தியாகின்றன. அங்குள்ள காட்டில் மூன்று லிங்கங்கள் மூன்று கண்போல் உள்ளன. இதனால் திரியம்பம் எனப் பெயர் வந்தது என்பர். பிரமன் சிவபெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் உரைத்ததால், அவனை மலையாகுமாறு சபித்தார் பெருமான். பிரமனது தவத்திற்கு இரங்கிப் பேத பாவனையின்றிப் பிரமகிரியில் இருப்பதாக அருள்பாலித்தார். இது காரணமாகவே இம்மலைக்குப் பிரமகிரி எனப்பெயர் வந்தது என்பர். அஷ்ட பைரவர் முதலிய திருவுருவங்கள் இங்கே உள்ளன. மாக்கல்லாலான லிங்கத்திற்குரிய பீடம் மட்டுமே உள்ளது. பீடத்தின் நடுவில் ஒரு சிறு செம்பு கொள்ளக் கூடியதாக ஒரு குழி உண்டு; இதனுள் மூன்று சிவலிங்க வடிவங்கள் இருக்கின்றன. இக்குழியிலிருந்து கங்கை வெளிப்படுகிறது.

***11.கேதாரம்:***

இமய மலையில் உள்ளது திருக்கேதாரம். தெற்கு நோக்கிய சந்நிதி. திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. கேதாரம் செல்லும் வழியில் இந்திர நீல பருப்பதம், தங்காவதம் ஆகிய பாடல் பெற்ற தலங்களையும் தரிசிக்கலாம். 'கேதார' என்னும் சொல், சிவபெருமான் கங்காதேவியை முடியில் வைத்திருக்கிறான் என்பதை உணர்த்தும். இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பத்ரியில் உள்ள நாராயணனைத் தரிசித்த பலன் உண்டு. திருமால் நரநாராயண வடிவத்தில் இருந்து, பார்த்திவ லிங்கத்தில் சிவபெருமானைப் பூசித்து, 'கேதார மலையில் தேவரீர் எழுந்தருளியிருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைக்கு இணங்கச் சுவாமி இங்கு எழுந்தருளி உள்ளார் என்பது ஐதிகம். கேதார நாதர் ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய மனிதர்களால் பூசிக்கப்படுகிறார். அக்டோபர் முதல் மார்ச் முடியப் பனியால் மூடப்பட்ட நிலையில் சிவபெருமானுக்குத் தேவ பூஜை நிகழுகிறது.

***12.குசுமேசம்:***

ஔரங்கபாத்தில் இறங்கி இத்தலத்திற்குச் செல்ல வேண்டும். சுதர்மன் என்ற அந்தணனின் மனைவியான குசுமையின் பெயரால் இறைவன் குசுமேசுவரன் எனப் பெயர் பெற்றான். இங்குள்ள சிவலிங்கம் செந்நிறம் உள்ளதாகக் காட்சி அளிக்கிறது. அம்பிகை குங்குமப் பூவால் வழிபட்ட சிறப்புடையது. சுதர்மனின் இரண்டாவது மனைவியான குசுமையின் புத்திரன் கொலை செய்யப்பட்டபோது, அவள் பூஜைக்கு இரங்கி இறைவன் அவளுக்கு மகனை எழுப்பி அருளிய சிறப்புடையது. பின்னே சொல்லப்பட்ட இரண்டு சோதி லிங்கங்கத் தலங்களிலும் உள்ளே புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், சகல பாவங்களையும் போக்கி மனத்திற்கு அமைதியை அளித்து வீட்டுலகையும், நல்கும். இங்குள்ள இலிங்கங்களின் பெயர்களை நாடோறும் காலையில் நினைத்த மாத்திரத்தே பாபம் அகன்று, நினைத்த செயல் நிறைவேறும் என்பது ஆன்றோர் துணிபு.



அருள்மிகு கேதாரநாதர்



குஷ்மேஷ்வரர் ஆலயம்

# ஓவிய மங்கையருக்கு உயிர் கொடுத்த குற்றால நாதர்

திருக்குற்றாலத் திருத்தலம் திருநெல்வேலி மாவட்டத்தில் தென் காசிக்கு அருகே உள்ளது. திருக்கோயில் பிரகாரத்திலிருந்து நீர்வீழ்ச்சியை நன்கு காண முடியும். கண் கவரும் சித்திரச் சபையைக் கொண்டுள்ள இத்தலம் குற்றாலம் என்றும் குறும்பலா என்றும் புகழ் பெற்றுள்ளது. குறுகிய வகை ஆலமரங்கள் நிறைந்த பகுதியாதலால் குற்றாலம் எனப்பட்டது. திரிசூலம் போன்று மூன்று சிகரங்கள் கூடுவதால் திரிகூடமலை என்று பெயர் பெற்ற மலையடிவாரத்தில் குறுகிய வகை பலா மரத்தடியில் லிங்கப் பரம்பொருள் வெளிப்பட்டிருந்ததால் திருத்தலம் குறும்பலா என்று பெயர் பெற்றது. பராபரனுக்குக் குறும்பலா நாதர் என்றும் குற்றால நாதர் என்றும் திருநாமங்கள். குறுகிய ஆலமரம், குறும்பலா போன்று குறும்பலா மரத்தடியில் எழுந்தருளிய லிங்கப் பரம்பொருளும் குறுலிங்கமாகவே உள்ளது. இத்திருத்தலத்திற்குத் தெய்வ மழலை திருஞான சம்பந்தர் அருளிய இரண்டு பதிகங்கள் கிடைத்துள்ளன. ஒரு பதிகம் முழுவதும் குற்றாலம் என்ற பெயருடனும் மற்றொரு பதிகம் குறும்பலா என்ற பெயருடனும் தமிழ் காத்த சம்பந்தர் இத்திருத்தலத்தைப் போற்றுகின்றார். தல மரமாகிய குறும்பலா மரம் சந்நிதியில் உள்ளது போல் நுழை வாசலுடன் பிரகாரத்தில் உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமை வாய்ந்த பட்டுப் போன ஒரு பலா மரத்தின் எச்சமும் தல மரத்திற்கு அருகே உள்ளது.

குற்றால மரத்தடியில் ஒரு முனிவர் பரமேஸ்வரனை சிந்தையில் நிறுத்திப் பல காலம் தவம் புரிந்தார். ஆல மரத்தின் கீழ் சிலை போன்று இருந்து தவம் புரிந்ததால் அவர் சிலால முனிவர் என்று பெயர் பெற்றார். சிலால முனிவர் நாள்தோறும் குற்றால அருவியில் நீராடிக் குறும்பலா மரத்தடியில் வெளிப் பட்டிருந்த குறுலிங்கப் பரம்பொருளைப் பூஜித்து வாழ்ந்தார். ஒரு நாள் கடல்வாணன் என்பவரின் இரண்டு தேவிமார்களும் குற்றால அருவியில் பெருங்களிப்புடன் நீராடி ஈர உடையுடன் ஓடியாடிச் சென்றனர். அப்போது அவர்கள் ஆடையிலிருந்தும் தலைமுடியிலிருந்தும் நீர்த்துளிகள் குறுலிங்கப் பரம்பொருள் மேல் தெறித்தன. பூஜை செய்து கொண்டிருந்த சிலால முனிவர் சிவ அபசாரம் நடந்ததைக் கண்டு இயக்கம் இல்லாத ஓவியங்களாகப் போகுமாறு மங்கையர்களைச் சபித்தார். மங்கையர் இருவரும் வரையப்பட்ட சித்திரம் போன்று ஆயினர். செய்தி அறிந்த கடல்வாணன் விரைந்து வந்து முனிவரின் கால்களில் விழுந்து மன்னிக்க வேண்டினான். குறும்பலா நாதரின் திருவருளால் மங்கையருக்கு மறு வாழ்வு உண்டாகும் என்று முனிவர் மொழிந்தார். கடல்வாணன் குறும்பலா நாதரை வழிபட்டுக் கோயில் கட்டிப் பூஜித்தான். நாள்தோறும் குறும்பலா நாதரை வணங்கித் தொழுதான். மனைவியரை மீட்டுக் கொடுக்குமாறு பரம்பொருளைக் கண்ணீர் மல்க வேண்டித் தொழுதான். கணவனுக்காகப் பூஜை செய்த மனைவியர் உலகில் பலர் உள்ளனர். மனைவியருக்காகப் பூஜையும் தவமும் புரிந்த கணவனின் பக்திக்குப் பரம்பொருள் கருணை காட்டினார். கடல்வாணனுக்கு ஜோதியாகக் காட்சி தந்த பரஞ்சோதிப் பெருமான் அந்தச் சோதியில் மனைவியரின் சித்திரங்களை இடுமாறு அருளிச் செய்தார். பரமனது பெருங் கருணைக்கு மனம் மிகவும் மகிழ்ந்த கடல்வாணன் சிவ நாமம் ஓதி ஜோதியை வலம் வந்து மனைவியரின் சித்திரங்களைத் தீயில் இட்டான். பரஞ்சோதியின் திருவருளால் மங்கையர் இருவரும் மீண்டும் உயிருள்ள பெண்களாகத் தீயிலிருந்து வெளி வந்து கடல்வாணனைத் தழுவிக் கொண்டனர். மூவரும் ஈசனைப் போற்றித் துதித்துக் குறும்பலா நாதரை வழிபட்டனர். குற்றால நாதரின் கருணைக்கு வியந்த மங்கையர்கள் சித்திரங்களாக இருந்த தங்களை இயங்க வைத்த இயக்க நாயகனுக்கு முழுவதும் சித்திரங்களால் ஆன திருச்சபை அமைத்து வழிபட்டனர். திருச்சபையில் எழுந்தருளி நடனமிட வேண்டும் என்று ஓசையொலிப் பெருமானைப் பூஜித்தனர். வேண்டுவோர் வேண்டுவதை வழங்கியருளும் வேதாகம வள்ளல் சித்திரச் சபையில் எழுந்தருளிக் கடல்வாணனுக்கும் மங்கையருக்கும் ஆனந்தத் திரு நடனக் காட்சி அருளினார். இந்த அற்புதமான வரலாற்றை

இருங்கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள் புணரும் உரு

என்று வாழ்நாள் முழுவதும் கடவுளைக் கண்டு வாழ்ந்த மாணிக்க வாசகப் பெருமான் போற்றுகின்றார்.

சித்திரப் புணரி சேர்த்திடத் திகழ்ந்தவன்

என்று பாலைவனத்தையும் பசுஞ்சோலை யாக்கிய தெய்வீக சம்பந்தர் பாடுகின்றார்.

குறும்பலா நாதர்க் கோயிலில் சிலால முனிவருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. சிலால முனிவர் ஆவுடையார் மீது உள்ளார். கோயிலுக்குச் சற்று தொலைவில் திருக்குளம் கோபுரம் ஆகியவற்றுடன் சித்திரச்சபை உள்ளது. சிறிய சுற்றுப் பிரகாரத்தைக் கொண்டுள்ள சித்திரச் சபையின் சுவர்கள், கூரைகள் அனைத்தும் ஊசி முனை இடமும் வெற்றிடமாக இல்லாமல் முழுவதும் தெய்வக் காட்சிகள் கொண்ட வண்ண வண்ண ஓவியங்களால் நிரம்பியுள்ளன.

குற்றாலத்து எம் கூத்தா போற்றி

குற்றாலத்து உறை கூத்தன்

என்று சித்திரச் சபைக் கூத்தபிரானைத் திருவாசகமும் அப்பர் தேவாரமும் துதிக்கின்றன. பலப்பல மண்டபங்களையும் பிரகாரங் களையும் சந்நிதிகளையும் கொண்டு குற்றால நாதர்த் திருக்கோயில் பெருங்கோயிலாகச் சிறப்புறுகின்றது.

சிலால முனிவர், கடல்வாணன், ஓவிய மங்கையர், வாசுகி நாகம், பரார‌சக்தி, பிரம்மன், விஷ்ணு, அகத்தியர், நரசிம்மர், சந்திரன், துர்கை, மகாலட்சுமி, முருகப்பெருமான், ஓங்கார ஒலி, ஐயப்பன், இராமன், வால்மீகி முனிவர், சனிபகவான், சூரியன், கும்பமுகி, என்ற அசுர மாது, சப்த மாதர்கள் மற்றும் பலர் காலந்தோறும் குறும்பலா நாதரையும் குற்றாலக் கூத்தனையும் வழிபட்டுக் குறையும் தோஷங்களும் நீங்கி நலமும் வளமும் அடைந்துள்ளனர். இவர்கள் உருவங்களும் இவர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கங்கள் மற்றும் நெல்லையப்பர். பால்வண்ண நாதர், மஹாலிங்கம், நாறும்பூ நாதர், காசி விஸ்வநாதர், பெரிய வாசலுடன் கூடிய உலக நாதர் எனப் பலப்பல லிங்க சந்நிதிகளும் பஞ்ச பூத லிங்க சந்நிதிகளும் பிரகாரங்களில் உள்ளன. மூலவர் சிறிய குறுலிங்கமாக இருப்பதால் கருவறைச் சுவற்றில் உள்ள தட்சிணாமூர்த்தி பிரம்மன் விஷ்ணு ஆகியோரும் தாழ்வாக அமர்ந்துள் ளனர். சாதாரணமாக நின்ற கோலத்தில் காணப்படும் பிரம்மனும் விஷ்ணுவும் அமர்ந்த நிலையில் உள்ள அரிய தலங்களில் திருக்குற்றாலமும் ஒன்று. பைரவரால் ஐந்தாவது தலை கொய்யப்பட்ட பின்னர் நான்முகன் ஆன பிரம்மன் சிவ பூஜை செய்த தலம் ஆதலால் இங்கு பிரம்மன் பிரகாரத்திலும் உள்ளான். பைரவருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. திருவாரூர். திருப்பூவனூர் ஆகிய தலங்களைப் போன்று திருக்குற்றாலத்திலும் அமர்ந்தாடும் பெருமானாகிய தியாகராஜர் முன்பு நந்தி நின்ற கோலத்தில் உள்ளார்

திங்களூர் போன்று குற்றாலத்திலும் சிவபூஜை செய்து வழிபட்ட சந்திரனுக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

தாட்சாயிணியாகப் பிறந்து இறந்த பின்பும் பார்வதியாக மறு பிறவி பெறுவதற்கு முன்பும் பராசக்தி சிவபூஜையும் தவமும் செய்த திருத்தலங்களில் குற்றாலமும் ஒன்று. பராசக்தி தவம் புரிந்த இடம் பராசக்தி பீடம் என்று தனிச் சந்நிதியாகத் திகழ்கின்றது. இங்கு உருவம் எதுவும் இல்லாமல் பீடம் மட்டும் அமைந்துள்ளது.

குற்றாலத்தில் சிவபூஜை செய்த அகத்தியருக்குத் திருமணக்காட்சி அருளிய மணக்கோலநாதர் எழுந்தருளியிருக்கும் மணக்கோல லிங்க சந்நிதி பிரகாரத்தில் உள்ளது. குழல்வாய்மொழியம்மன் என்ற பெயருடன் அம்மனுக்குத் தனிச் சந்நிதி குற்றால நாதருக்கு வலது புறம் உள்ளது. மணக்கோல லிங்க சந்நிதியில் அகத்தியரும் பிற முனிவர்களும் லிங்கத்தைச் சூழ்ந்து இருப்பது அல்லாமல் அகத்தியருக்குத் தனிச் சந்நிதியும் விளங்குகின்றது.

சூரபதுமனை வெல்வதற்காக முருகன் சிவ பூஜை செய்த தலங்களில் திருக்குற்றாலமும் ஒன்று. முருகன் பூஜை செய்த லிங்கம் முருகன் சந்நிதியில் முருகனுக்கு முன்னே உள்ளது. பிள்ளையார் உருவங்கள் பிரகாரத்தில் உள்ளன.

விஷ்ணு தூணிலிருந்து வெளிப்படுவதற்கு முன்பு இரண்யாட்சனைக் கொல்லும் சக்தி பெறுவதற்காக சிவ பூஜை செய்த தலங்களில் திருக்குற்றாலமும் ஒன்று. மஹா விஷ்ணு பிரதிட்டை செய்த லிங்கமும் நரசிம்மர் உருவமும் பிரகாரத்தில் உள்ளன.

குறும்பலா நாதரையும் குற்றாலக் கூத் தனையும் உள்ளம் ஒன்றி வழிபடுகின்றவர் களுக்கு இணை பிரியாத திருமண வாழ்வு உண்டாகின்றது. செய்யும் காரியங்களில் வெற்றி கிட்டுகின்றது. சனி தோஷம் உண்டாவது இல்லை. மீண்டும் பிறவி இல்லாமல் ஆத்மா முக்தி பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்கின்றது.

**பேராசிரியர்-சிவப்பிரியா**

# சேயூர் முருகன்

முருகன் வாழும் ஆலயங்களில் பல்வேறு சிறப்புக்கள் இருந்தாலும், தனிச் சிறப்பு கொண்ட ஆலயமாகத் திகழ்வது சேயூர் முருகன் ஆலயமாகும்.

முருகப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் கணங்களுள் வேதாளங்களுக்கும் இடமுண்டு. அந்த வகையில் வேதாளங்கள் வழிபடும் ஆலயமாகத் திகழ்வது சேயூர் கந்தசாமியார் ஆலயமாகும். இந்த வேதாளங்கள் பற்றி காசிக் கண்டத்தில் கூறப்பட்டுள்ளது.



இவ்வாலயத்தின் உட்புறச் சுவரில் 27 வேதாளங்கள் இறைவன் கருவறையை நோக்கியவாறு வெவ்வேறு வடிவங்களில் காட்சி தருகின்றன. இந்த ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதற்கு இவ்வாலயம் குறித்து பாடப்பட்டுள்ள பாடல்கள் சான்றாக விளங்குகின்றன.

### தொன்மைச் சிறப்பு

இன்றைய செய்யூர் மிகவும் பழமை வாய்ந்தது என்பதற்கு இவ்வூரில் கிடைத்த கல்வெட்டுகள் சான்றாக அமைகின்றன. கி.பி.1902 ஆம் ஆண்டு தொல்லியல் ஆய்வறிக்கையின் மூலம் இவ்வூரில் 27 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் பழமை வாய்ந்தது, இராஜகேசரி வர்மன் (கி.பி.1068) கால கல்வெட்டாகும்.

இவ்வூரில் புகழ் பெற்ற இரண்டு சிவாலயங்கள் சிறப்புடன் இருந்ததை இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வால்மீகிநாதர் ஆலயம் மற்றும் கயிலாசநாதர் ஆலயம் என இரண்டு ஆலயங்களுமே சோழர் காலத்தில் வெகு சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தன. ஆனால், இன்று வால்மீகிநாதர் ஆலயம் மட்டுமே நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கயிலாசநாதர் ஆலயம் சிதிலமடைந்து முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1114), விக்கிரம சோழ தேவன் (கி.பி.1121),

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1137), இரண்டாம் இராஜராஜன் (கி.பி.1150) இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி.1168), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி., 1204) என பல்வேறு சோழ மன்னர்களும் மற்றவர்களும் இவ்விரு ஆலயங்களுக்கு கொடைகள் வழங்கியதை கல்வெட்டுகள் எடுத்துரைக் கின்றன.

**இலக்கியங்கள்**

இத்தலத்து முருகனை அருணகிரிநாதர் தனது திருப்புகழால் பாடியுள்ளார். இதேபோல், இத்தலத்து முருகனைச் சேறைக் கவிராயர் சேயூர் முருகன் உலா மூலமாகப் புகழ்ந்துரைத்துள்ளார்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் (கி.பி.1661) தனது சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் மற்றும் சேயூர் கலம்பகம் ஆகியவற்றின் மூலம் புகழ்ந்துரைக்கிறார். மேலும் ஜெயங் கொண்டாரும் இத்தலத்து முருகனைப் பாடியுள்ளார்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சேயூர் முருகன் பதிகக்கோவை, பாடியுள்ளார். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகளும் தனது நெஞ்சுவிடு தூது நூலில் இத்தலத்து விழாக்கள் பற்றிக் குறிப்பிட்டுள் ளார். இவ்வூரைச் சேர்ந்த செய்யூர் முத்தையா முதலியார் கி.பி.1944ல் இத்தலத்தைப் பற்றி சேயூர்த் தலவரலாறு என்ற சிறிய நூலை இயற்றியுள்ளார்.

ஒற்றிகொண்டான் என்பவனின் புதல்வனான கழுக்குன்றம் (கி.பி.1521–1522) என்பவன், இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்து தேரை உருவாக்கி, விழாக்கள் நடத்தியதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது.





**சேயூர்**

பழங்காலத்தில் சேயூர் என்று அழைக்கப்பட்ட இத்தலம், தற்போது மருவி செய்யூர் என்று அழைக்கப்படுகிறது. இது காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டத்தில் அமைந்துள்ளது.

சேய் என்பதற்குச் செந்நிறம் உடையவன் என்றும், குழந்தை என்றும் பொருள் கொள்ளலாம். அந்த வகையில் சிவபெருமானின் நெற்றில் தீப்பொறியாகத் தோன்றியதாலும், குழந்தையாகத் திகழ்ந்ததாலும் முருகனுக்குச் சேய் என்ற பெயர் நிலைத்தது. இந்தச் சேய் வாழும் ஊரே சேயூர் என்று அழைக்கப்பட்டது.

இவ்வூருக்குச் சோழர் ஆட்சியில் வளவ நகர் என்றும் இலக்கியங்களில் திரையர்புரி என்றும் அழைக்கப்பட்டது. (கும்பகோணத்திற்கு அருகே சேய்ஞனூர் என்ற தலம் இருப்பதும் நினைவுகூரத்தக்கது. தேவாரப் பாடல் பெற்ற இத்தலத்து இறைவனிடம், சேயான முருகன் படைக்கலம் பெற்றார் என்பது வரலாறு)

இன்றைய செய்யூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து செம்புரார்க் கோட்டத்து புறையூர் நாட்டு ஜெயங்கொண்ட சோழநல்லூர் எனும் சேயூர் என அழைக்கப்பட்டது.

**ஆலய அமைப்பு**

செய்யூரின் நடுவே பெரிய பரப்பளவில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது. சன்னதி கிழக்கு நோக்கி அமைந்திருந்தாலும், ஆலய வழி தெற்கு நோக்கியே அமைந்துள்ளது. தெற்கு வாயிலின் இருபுற சுவர்களிலும் நவ வீரர்களின் சிற்பங்கள் புடைப்புச்

சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

ஆலயத்திற்குள் முருகன் கருவறையில் எதிரே கொடிமரமும், பலிபீடமும், மயில் மண்டபமும் அமைந்துள்ளன. வசந்த மண்டபம், அர்த்த மண்டபத்தை அடுத்து, கருவறைக்கு வெளியே துவார பாலகர்கள் காவல் புரிகின்றனர்.

கருவறையில் மூலவரான அருள்மிகு கந்தசாமியார் எழிலான கோலத்தில் காட்சி தருகிறார். முருகனின் கருவறையைச் சுற்றி பஞ்ச கோட்டங்களில் நிருத்திய ஸ்கந்தர், பிரம்மசாஸ்தா, பாலஸ்கந்தர், சிவகுருநாதர், புலிந்தர் என முருகப் பெருமானின் வெவ்வேறு வடிவங்கள் அமைந்துள்ளன. புலிந்தர் என்பது வேடுவரைக் குறிக்கும் சொல்லாகும். கருவறையை ஒட்டி விநாயகப் பெருமானும், கஜலட்சுமியும் காட்சி தருகின்றனர்.

உற்சவ மூர்த்தியாக முத்துக்குமாரசாமி விளங்குகின்றார். இவர் சூரசம்ஹாரம் மற்றும் பிற விழாக்களில் காட்சி தருவார். முருகப் பெருமான் கையில் வேலைத் தாங்கி, தனது வலது காலை மயிலின் முதுகின் மீது வைத்து கம்பீரமாக காட்சி தருவது கலைநயமிக்கதாகும்.

முருகன் கருவறைக்கு இடதுபுறம் கிழக்கு நோக்கிய சோமநாதர், தெற்கு நோக்கிய மீனாட்சியம்மை ஆகியோர் ஒரே சந்நிதியில் காட்சி தருகின்றனர்.

**விழாக்கள்**

ஆண்டுதோறும் பங்குனிக் கிருத்திகையில் தொடங்கும் பிரம்மோற்சவம் பத்து நாட்கள் நடைபெற்று பங்குனி உத்திரத்தில் முடிவடையும். ஏழாம் நாள் தேர்த் திருவிழாவும், உத்திரத்தன்று முருகனின் திருமண விழாவும் நடைபெறும்.

இதுதவிர, ஆடி, தை கிருத்திகை, கந்தர் சஷ்டி, கார்த்திகை தீபம் ஆகிய நாட்களில் முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

**தலமரம் – தீர்த்தம்**

இத்தலத்தின் தலமரமாக கருங்காலி மரம் அமைந்துள்ளது. திருக்குளம் செட்டிக்குளம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இது ஆலயத்திற்கு மேற்கே அமைந்துள்ளது. முருகப் பெருமானுக்கு செட்டி என்ற அடைமொழி உண்டு. ஆக முருகப் பெருமானைப் போற்றும் வகையில் இக்குளம் அமைந்துள்ளது.

**தரிசன நேரம்**

இத்திருக்கோயில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.

**செல்லும் வழி**

சென்னையிலிருந்து தென்மேற்கே 98 கி.மீ., புதுச்சேரியிலிருந்து வடமேற்கே 56 கி.மீ., மதுராந்தகத்திலிருந்து தென்கிழக்கே 25 கி.மீ., தொலைவில் செய்யூர் அமைந்துள்ளது.

சென்னை – புதுச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலையில் கல்பாக்கத்தை அடுத்து எல்லையம்மன் கோயில் பஸ் நிறுத்தத்தில் இறங்க வேண்டும். அங்கிருந்து மேற்கே சுமார் 6 கி.மீ., தொலைவில் உள்ள செய்யூருக்கு ஆட்டோ மூலம் செல்லலாம். இதேபோல, கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்தும் செய்யூருக்கு நேரடி பஸ் வசதி உள்ளது.

**படங்கள், கட்டுரை: பனையபுரம் அதியமான்.**





அருட்செல்வர் பொள்ளாச்சி திரு.என். மகாலிங்கம் அவர்களின் சீரிய முயற்சியாலும், கனடா பாபாஜி கிரியா யோகா மையத்தினர், சென்னை யோக சித்த ஆய்வு மையத்தினர் மற்றும் சென்னை வர்தமான் பதிப்பகத்தினரின் உறுதுணையுடனும் வெளியிடப்பட்ட திருமூலரின் திருமந்திர ஆங்கில மொழிபெயர்ப்பு நூலினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வெளியிட்டார். முதல் பிரதியினை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார் . இவ்விழாவில் சென்னை மாண்பமை உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் திரு.வி இராம சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 3.2.2010, அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நினைவு நாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ப.ரா. சம்பத் இ.ஆ.ப. அவர்களும் முக்கிய பிரமுகர்களும் திரளான பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வர்த்தகப் பொருட்காட்சியில் இந்து சமய அறநிலையத்துறையின் அரங்கு






சென்னை தீவுத்திடலில் நடைபெற்றுவரும் வர்த்தகப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை அரங்கினை, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் பார்வையிட்டார் உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ப.ரா.சம்பத் அவர்கள் கூடுதல் ஆணையர் திரு. தி. ஜெயராமன் அவர்கள் சென்னை இணை ஆணையர் திரு. பி. வாசுநாதன் ஆகியோர்.









# முப்பெரும் தேவியர் உடனுறை மும்மூர்த்திகள் திருத்தலம்

# திருக்கரம்பனூர்

## அருள்மிகு உத்தமர் கோயில்



விஷ்ணு குரு
அருள்மிகு வரதராஜ பெருமான்



ஞான குரு
அருள்மிகு சுப்ரமண்யர்



அசுர குரு
அருள்மிகு சுக்ராச்சாரியார்

திருச்சி மாநகரில் இருந்து சுமார் 5 கி.மீ., தொலைவில் பிச்சாண்டார் கோயில் என்னும் அழகிய சிற்றூரில் கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் தென்னை மரங்களும் செந்நெல்வயலும் சூழ்ந்த கவித்துவமான சூழலில் அருள்மிகு உத்தமர் கோயில் எழிலுடன் அமைந்துள்ளது.

கதம்பவனம், கரம்பனூர், திருக்கரம்பனூர், ஆதிமாபுரம், பிரம்மபுரி, தீபக்ஷேத்திரம், தீபவனம், திருக்கரம்பந்துறை ஆகிய பண்டைய பெயர்களுடன் தற்போது பிச்சாண்டார் கோயில் என்றழைக்கப்படும் இவ்வூரும், அருள்மிகு உத்தமர் கோயிலும் சைவ வைணவ ஒருமைப்பாட்டுக்கு சான்றாக விளங்குகின்றது.

உத்தமர் கோவிலில் பிரம்மாவிற்கு தனி சன்னதியும் சிறப்பு பூஜைகளும் நிகழும் காரணத்தை பிரம்மாண்ட மகாபுராணம் விளக்குகிறது.

திருமாலின் நாபிக் கமலத்தில் தோன்றிய பிரம்ம தேவர் தன் தந்தையாகிய திருமாலின் கட்டளைப்படி பகவானின் கல்யாண குணங்களை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி வந்ததுடன் அவரைத் தனது சத்யலோகத்தில் வைத்துப் பூஜை செய்து வந்தார். பிரம்மாவின் பூஜையைச் சோதிக்க விரும்பிய திருமால், கதம்ப வனமாக இருந்த உத்தமர் கோயிலுக்கு வந்து ஒரு கதம்ப மர உருவில் மறைந்திருந்தார்.

பெருமாளைக் காணாமல் வருந்திய பிரம்மா எங்கெங்கும் தேடி அலைந்து, இறுதியில் உத்தமர்கோவிலில் அவர் கதம்ப மரமாக இருந்ததைக் கண்டு மகிழ்ந்து தனது கமண்டல தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வழிபட்டார். துவாதச அட்சரத்தால் பெருமாளை ஆராதனை செய்து படைப்புத் தொழிலைப் பெற்றார். பின்னர்



பிரம்ம குரு
அருள்மிகு பிரம்மா



சக்தி குரு
அருள்மிகு சௌந்தர்யபார்வதி



தேவ குரு
அருள்மிகு பிரஹஸ்பதி


அருள்மிகு பிரம்மா


அருள்மிகு புருஷோத்தமர்
ஸ்ரீதேவி பூதேவி சமேதராய்


அருள்மிகு பிச்சாடனர்


அருள்மிகு ஞான சரஸ்வதி


அருள்மிகு பூரணவல்லித் தாயார்


அருள்மிகு சௌந்தர்ய பார்வதி

பெருமாளின் அருளாணைப்படி இத்தலத்திலேயே குடிகொண்டு பெருமாளின் நித்யபடி பூஜையைக் கண்ணுற்று பக்தர்களுக்கு அருள் வழங்கி வருகிறார்.

படைப்புத் தொழிலைப் பெற்ற இத்தலத்தின் பிரம்மாவையும், பெருமாளையும் வழிபட்டால் வேண்டுவன அனைத்தும் பக்தர்களுக்கு கிடைத்து வருவது கண்கூடான உண்மையாகும்.

பெருமாளை பிரம்மா அபிஷேகம் செய்த கமண்டல தீர்த்தமானது ஒரு குளமாகத் தேங்கியது. இக்குளத்தின் கரையில் கதம்ப முனிவர் செய்த கடும் தவத்திற்காக மும்மூர்த்திகளும் அவர் தம் தேவியருடன் காட்சி தந்து அருளியதால் இக்குளம் 'கதம்ப புஷ்கரணி' என்ற பெயரில் இன்றளவும் உள்ளது.

**ஞானசரஸ்வதி**

பிரம்மாவின் இடப்புறம் தனி சன்னதியில் கலைவாணி, கல்விக் கடவுள் சரஸ்வதி வீணைக்கு பதிலாக ஏட்டுச் சுவடியை ஒரு கரத்திலும், ஜெபமாலையை ஒரு கரத்திலும் ஏந்தி அபய, வரத அஸ்தங்களுடன் ஞானத்தின் திசையான தெற்கு நோக்கி தென்முகமாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். மாணவர்களுக்கு நல்லறிவு, உயர் கல்வி, தேர்வில் உயர்வுடன் கூடிய வெற்றி, நல்ல உத்யோகம் ஆகியவை சரஸ்வதியை வழிபடுவதால் கைகூடி வருகிறது.

குருவாரமாகிய வியாழக்கிழமை தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அர்ச்சனை செய்து சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஆரோக்கியம், தொழில் மேன்மை, வேலை வாய்ப்பு, சுயதொழில், உத்தியோக உயர்வு, திருமணம், புத்திர பாக்கியம், உயர் கல்வி, வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு, மன நலம், வழக்குகளில் வெற்றி, மன நிம்மதி உள்ளிட்ட அனைத்து பிரார்த்தனைகளும் 11 வாரங்கள் தொடர்ந்து அர்ச்சனை செய்வதனால் பிரம்மாவினால் நிறைவேற்றி வைக்கப்படுகின்றன.

பக்தர்களுக்கு ஜாதகத்தில் விஷ்ணு தோஷம் இருந்தால் புதன் கிழமையிலும், சிவன் மற்றும் குரு தோஷம் இருந்தால் வியாழக் கிழமைகளிலும், நாக தோஷம் மற்றும் சுமங்கலி தோஷம் இருந்தால் வெள்ளிக் கிழமையிலும் பிரம்மாவிற்கு உகந்த ஆத்தி இலையில் அர்ச்சனை செய்வது நலம்.

புத்திரபாக்கியம் வேண்டுவோர் இராம பிரானின் தந்தை தசரத மகராஜா பூஜித்த தசரத லிங்கத்தை வில்வ இலையால் எந்நாளும் அர்ச்சனை செய்து பலன் பெறலாம். தசரத லிங்கத்திற்கு தொடர்ந்து 48 வாரங்கள் அர்ச்சனை செய்து குழந்தைப் பேறு பலருக்கு கிடைத்துள்ளது கண்கூடான நிதர்சனமான உண்மை.

**புருஷோத்தமப் பெருமாள்**

காக்கும் கடவுளாகிய விஷ்ணு கிழக்கு முகமாக ஆதிசேசனின் மீது பள்ளி கொண்ட நிலையில் புருஷோத்தமர் என்ற திருநாமத்துடன் சேவை சாதிக்கிறார். அவர் தனது மார்பில் மகாலட்சுமியையும், நாபியில் (கோஷ்டத்தில்) பிரம்மாவையும் கொண்டு விளங்குவது மிகச் சிறப்பான ஒன்றாகும்.

பெருமாளின் பாதத்தில் அர்த்த மண்டபத்தில் கோஷ்டத்தில் கதம்ப மகரிஷி என்ற மாமுனிவர் பெருமாளை வழிபட்டவாறு நின்ற நிலையில் காணப்படுகிறார். இவரது கடும் தவத்திற்காகத்தான் இத்திருக்கோயிலில் மும்மூர்த்திகளும் காட்சி அளித்ததாக புராண வரலாறு கூறுகிறது.

**பூரணவல்லித்தாயார்**

புருஷோத்தமப் பெருமாள் சன்னதியில் வெளியில் மகாலட்சுமிக்கென தனி சன்னதி உள்ளது. இத்துடன் இத்திருக்கோயிலின் முக்கிய சிறப்பம்சமாக மகாலட்சுமி 'பூரணவல்லித் தாயார்' என்ற திருநாமத்துடன் அருள்புரிந்து வருகிறார்.

**பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது.**

படைப்புக் கடவுள் பிரம்மா தான் படைத்த சரஸ்வதி தேவியை தானே மணக்க விரும்பியதை தெரிவித்தபோது, படைத்தவரே

தன்னை மணப்பது நியாயமாகாது என்று சரஸ்வதி மறுத்தார். ஆனால், குடும்ப நியதிக்காக தனக்கு மனைவியாவதற்காகவே சரஸ்வதியைத் தான் படைத்ததாக கூறி சரஸ்வதியின் சம்மதம் பெற்று பிரம்மா அவரை மணம் புரிந்தார். அரை மனதுடன் சம்மதித்த சரஸ்வதி தேவி, தன்னை மனைவியாக அடைந்த தோஷத்துக்கு பிரம்மா பின்னாளில் சிவ பெருமானால் தண்டிக்கப்படுவார் என்று சாபம் தந்தார்.

அந்தச் சாபம் நிறைவேறும் காலம் நெருங்கியது. திருவிளையாடல் புரிந்து நீண்ட காலமான சிவபெருமான் பிரம்மாவைக் காண பிரம்மலோகத்திற்கு வந்தார். சிவபெருமானைப் போலவே ஐந்து முகம் கொண்டிருந்த பிரம்மா ஓடி வந்து ஈசனை வரவேற்று வணங்கினார். பிரம்மனின் ஐந்து திருமுகங்களில் நான்கு முகங்கள் ஈசனைப் புகழ்ந்து பாடின. ஆனால், ஐந்தாவது முகம் மட்டும் செருக்குடன் ஈசனை மதிக்காமல் அலட்சியம் செய்து நகைத்தது. பிரம்மாவிற்கு அவப் பெயர் ஏற்படுத்த முனைந்து ஆணவம் கொண்டிருந்தது. பிரம்மாவின் அந்த ஐந்தாவது தலையை ஈசன் கிள்ளித் துண்டித்து தூர எறிந்தார். ஆனால், துண்டிக்கப்பட்ட தலை சிவனின் கையிலேயே ஒட்டிக் கொண்டு சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. பிரம்ம கபாலத்தை பிக்ஷா பாத்திரமாக ஏந்தி பிட்சாடனராக மாறினார் ஈசன்.

தோஷத்தால் பீடிக்கப்பட்டிருந்த பிட்சாடனரின் பிச்சைப் பாத்திரம் நிரம்பும் அளவுக்கு யாரும் பிச்சையிடவில்லை. பிச்சைப் பாத்திரம் நிரம்பினால் தான் பிரம்மஹத்தி தோஷம் விலகும் என்ற பரிகாரம் இருந்ததால் தீர்த்த யாத்திரையாக ஒவ்வோர் க்ஷேத்திரமாக அலைந்து திரிந்தார் சிவன். க்ஷேத்திராடனமாக ஒருநாள் கதம்ப வனமாகிய உத்தமர் கோயிலை வந்தடைந்தார். சேஷ சயனத்தில் இருந்து புருஷோத்தப் பெருமாள் கருணையுடன் பூரணவல்லித் தாயாரை நோக்க, ஊருக்கெல்லாம் அன்னமிடும் மகாலட்சுமி பூரணவல்லித் தாயார் தன் திருக்கரங்களால் சிவனின் கையிலிருந்த பிரம்ம கபாலத்தில் பிச்சையிட்டாள். அதுவரை நிரம்பாத பிச்சைப் பாத்திரம் உத்தமர் கோயிலில் நிரம்பி வழிந்தது. சிவனின் கையில் ஒட்டிக் கொண்டிருந்த பிரம்மாவின் கபாலம் மறைந்து ஈசனுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கி அவர் தனது மீண்ட பொலிவுடன் கைலாயம் சென்றார்.

சிவபெருமானின் தோஷம் நீங்க அன்னமிட்ட பூரணவல்லித் தாயாரை மனமுருகி வழிபடுவதால் பக்தர்களின் இல்லத்தில் பசி, பட்டினி, பஞ்சம் நீங்கி அன்னம் உள்ளிட்ட அனைத்து ஐஸ்வர்யங்களும் பூரணமாகத் தங்கும்.

ஒருமுறை தாருகா வனத்திலிருந்த மகரிஷிகள் கல்விச் செருக்கினாலும் தவ வலிமையாலும் ஆணவம் கொண்டு சிவ பக்தியின்றி தாமே உலகில் பெரியவர்கள் என்றும் மக்களை வழிப்படுத்த தாமே போதுமென்றும், மக்களின் கர்மாவே அவரவர்களின் நற்செயல் தீய செயலுக்குரிய பலனை அளிப்பதால் இறைவன் என்ற ஒருவனே தேவையில்லை என்று கர்வம் கொண்டனர். அதைப் போன்றே இவ்வுலகில் உள்ள பெண்கள் மட்டுமின்றி தேவலோகப் பெண்டிர் மற்றும் முப்பெரும் தேவியரும் தங்களை விட அழகில் குறைந்தவர் களென்றும் ஈரேழு உலகிலும் பேரழகிகள் தாமே என்றும் ரிஷி பத்தினிகள் ஆணவம் கொண்டனர்.

எனவே ரிஷிகளையும், ரிஷி பத்தினிகளையும் நெறிப்படுத்த மெஞ்ஞானம் உண்டாக்க சிவபெருமான் பிட்சாடனர் திருக்கோலம் பூண்டார்.

பிச்சாண்டவராகிய சிவன் திருமாலை மோகினி அவதாரம் பூணச் செய்து தன்னுடன் அழைத்துக் கொண்டு முனிவர்கள் யாகம் செய்து கொண்டிருந்த தாருகா வனத்தை சென்றடைந்தார். முதலில் பெண்டிரைத் திருத்த சென்ற ஈசன் தனது காந்தக் குரலில் பிச்சையிடுமாறு வேண்டினார். இதுவரை கண்டிராத ஒருவனை – அதுவும் வாட்டசாட்டமான பிச்சைக்காரன் ஒருவனைப் பார்த்த ரிஷிகள் யாரந்தப் புதியவன் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே இறைவனின் வசியக் குரலால் ஈர்க்கப்பட்டு வீட்டை விட்டு வெளியே வந்த ரிஷி பத்தினிகள் தம் நிலையை மறந்து, செய்து கொண்டிருந்த வேலையைத் துறந்து, பிட்சாடனரின் தெய்வீகக் கோலத்தைக் கண்டு யாரந்தப் பேரழகன் என்று வியந்தனர். மோகினியின் அழகைக் கண்டு செருக்கழிந்தனர். உலகப் பேரழகிகள் தாமேயென்றும், உலகில் வேறு யாரும் அழகாக இருக்க முடியாதென்றும் அறியாமையில் உழன்றதை எண்ணி ரிஷி பத்தினிகள் வெட்கினர்; அவர்களது கர்வம்

அழிந்தது. ரிஷிபத்தினிகள் பின்தொடர பிச்சாடனரும் மோகினியும் யாகசாலையை அடைந்தனர்.

புதிய பிச்சைக்காரனின் அழகில் ரிஷிபத்தினிகள் கட்டுண்டு நின்றதைக் கண்ட ரிஷிகள் சினத்தாலும் சிறுமதியாலும் வந்திருப்பவன் இறைவனென்று அறியாமல் அவரை அழித்துவிட முற்பட்டனர். தங்களின் தவ வலிமையால் ஓர் யாகம் செய்து யாக குண்டத்திலிருந்து ஒரு யானையை தோன்றச் செய்து பிச்சாடனரை அழிக்க ஏவினர். ஆவேசமாக வந்த யானையை வீழ்த்தி, அதன் தோலை உரித்து உடலில் அணிந்தார். முனிவர்கள் அடுத்து புலியை ஏவவே அதைக் கொன்று அதன் தோலை இடையில் ஆடையாக உடுத்தினார்.

அவர்களால் ஏவப்பட்ட பாம்பு மற்றும் இதர நச்சரவங்களை உடலில் அணிகலன்களாக உடுத்திக் கொண்டார்.



சிவ குரு

அருள்மிகு தட்சணாமூர்த்தி

வேள்வியிலிருந்து மந்திர சக்தியுடன் அனுப்பப்பட்ட மான், மழு என்ற ஆயுதம், 'டபரா' என்ற தீப்பிழம்பு ஆகியவற்றை கையில் தாங்கிக் கொண்டார். முனிவர்களால் ஏவப்பட்ட 'அபஸ்மாரம்' என்ற பயங்கர பூதத்தை ஈசன் தன் வலது பாதத்தின் கீழ் போட்டு வதம் செய்தார்.

மந்திர சக்தியால் தங்களால் ஏவப்பட்ட மிருகங்கள், பூதம் உட்பட அனைத்தையும் வந்துள்ள பிச்சைக்காரன் அழித்ததைக் கண்டு கலக்கமும், திகைப்பும் கொண்ட முனிவர்கள் வந்திருப்பவர் தங்களின் சக்திக்கு மீறிய ஒரு சக்தியின் முழு வடிவம் என்று உணர்ந்து அதுயாரென்று அறிய இறுதியாக மந்திரங்களையும் வேதங்களையும் ஏவினர். இறைவன் மந்திரங்களை உடுக்கை ஒலியாக கையில் ஏந்தினார். வேதங்கள் அழிந்தால் உலகில் சர்வ நாசம் ஏற்படும் என்பதால் இறைவன் அவற்றை உடுக்கை ஒலியாகவும், பாத சிலம்பின் ஒலியாகவும் மாற்றி, சூலத்தைத் தோளில் ஏந்தி தம் விரிசடை எட்டுத் திக்கும் விரிந்தாட திருநடனம் புரிந்தார்.

பிச்சாடனராக வந்திருப்பது பரமேஸ்வரனே என்று உணர்ந்த ரிஷிகள் இறைவனின் காலில் விழுந்து வணங்கி தங்களின் பிழை பொறுத்தருள வேண்டினர். கல்வி கற்பது மனிதன் மேம்படவே என்றும், தவமியற்றுவது தேவத் தகுதியைப் பெற்று உலகுக்கு நன்மை செய்வதற்கே என்றும் ரிஷிகளுக்கு உணர்த்திய சர்வேஸ்வரன் பிட்சாடனராக உத்தமர் கோயிலில் குடி கொண்டு திருவருள் புரிந்து வருகிறார்.

பிச்சாடனரின் திருவுருவம் சிலா விக்ரமாக தட்சணாமூர்த்தி சன்னதியின் அருகில் தனி சன்னதியில் (கோஷ்டத்தில்) ஞானரூபமாக தென்முகமாக உள்ளது. சிவபெருமான் மூலவர் சன்னதியில் மூலவருக்கு அருகிலேயே பிச்சாண்டவர் உற்சவமூர்த்தி உள்ளது.

தவ வலிமை பெற்ற முனிவர்களின் கர்வத்தையே அழித்து அவர்களை நல்வழிப்படுத்திய பிச்சாடனரை வழிபடுவதால் நம்மிடம் உள்ள தீய குணங்கள் அனைத்தும் நீங்கி நல்லறிவு நிறையும்.


சௌந்தர்ய பார்வதி

சிவபெருமான் (பிச்சாண்டவர்) சன்னதியின் வெளிப்புறம் முன் மண்டபத்தில் தனி சன்னதியில் அன்னை பராசக்தி சௌந்தர்ய பார்வதி என்ற திருநாமத்துடன் தென்முகமாக சக்தி குருவாக பக்தர்களுக்கு வேண்டுவன அனைத்தையும் வழங்கி வருகிறார்.

இவ்வாறு உத்தமர்களாகிய முப்பெரும் தேவியர் உடனுறை மும்மூர்த்திகளும் குடி கொண்டு இருப்பதால் இக்கோயில் 'உத்தமர் கோயில்' என்று பெயர் பெற்றது.

மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள **108** வைணவ திவ்யதேசங்களில் இது ஒன்றாகும். ஸ்ரீரங்கத்திற்கு அடுத்த சிறப்புடைய இத்திருக்கோயில் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

# திருமந்திரம்



அன்பையும், அருளையும், சிவத்தையும் அனுபவித்து உணர்ந்தவர்கள் நம் அருளாளர்கள், அவர்கள் உள்ளொளி பெற்றவர்கள். மெய்ப் பொருளைக் கண்டவர்கள்.

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாவது திருமுறையாகும்.

திருமூலர், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படுகிறார். இவர் காலம் 8–ஆம் நூற்றாண்டென அறிஞர் பெருமக்கள் வரையறுத்துள்ளனர்.

திருமூலர், தாம் கயிலையில் நந்தியெம் பெருமானிடம் உபதேசம் பெற்றதாக அவர் பாடிய பாடலில் குறிப்பிடுகிறார். நந்தி அருள் பெற்றவர்கள் எண்மர். அதாவது எட்டு பேர் என்றும், ஜனகாதி முனிவர் நால்வர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் இவர்களோடு தம்மையும் சேர்த்து எண்மர் என்கிறார்.

**'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'**

என்றவர் பாடியவாறு தமிழின் முதல் ஆகம நூலாகத் திருமந்திரத்தைப் படைத்தார்.

திருமூலர், மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் இருந்தார் என்றும், ஆண்டுக்கு ஒரு பாடலாகத் திருமந்திரப் பாடல்களை இயற்றினார் என்றும் சேக்கிழார் கூறும் பெரிய புராணப் பாடல்கள் வாயிலாக திருமூலர் யோக ஆற்றலால் மிகப் பல ஆண்டுகள் வாழ்ந்ததாகக் கருத வேண்டியுள்ளது. திருமந்திரம் மூவாயிரம், தமிழ் மூவாயிரம், மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ், எனும் குறிப்புகளால் திருமந்திரப் பாடல் தொகை மூவாயிரம் என்பது உறுதியாகிறது.

இந்நூல் 9 தந்திரங்களாக வகுக்கப் பெற்றுள்ளது.

தமிழ் நெறியும் வைதிக நெறியும் கலந்து சைவ சமயம், ஒரு பெருஞ்சமயமாகத் தமிழகத்தே உருவான காலக்கட்டத்தில், திருமூலர் சைவ நெறிக்கு சாத்திர மாகவும், தோத்திரமாகவும் அமையும் வகையில் முதல் நூலகத் திருமந்திரத்தைப் பாடினார்.

திருமந்திரம் முதல் ஆகம நூல் மட்டுமன்று, முதல் யோக நூலும் ஆகும். திருமந்திரம் சைவத் திருமுறை என்றாலும் ஏனைய திருமுறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதைப் படிப்போர் உணரலாம்.

**"நிறைமொழி மாந்தர்**
**ஆணையிர் கிளந்த**
**மறைமொழி தானே**
**மந்திரம் என்ப"**

எனும் தொல்காப்பியரின் இலக்கண நூற்பாவிற்கு ஏற்பவும்.

**"நிறைமொழி மாந்தர்**
**பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி**
**விடும்"**

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு இணங்கவும், திருமந்திர நூல் தமிழர்க்கு கிடைத்த ஒப்பற்ற பெறற்கரிய ஆன்மிக கருவூலமாகத் திகழ்கிறது.

தம்மை மறந்த பக்தி உணர்வில் பாடிய பாடல்கள் அல்ல அவை. அறிவின் துணை கொண்டு ஞானத்தைக் கண்டடையும் சாத்திர நூலாகும். மெய்கண்ட நூல்கள் எனும் பதினான்கு சாத்திரங்கள் தமிழில் தோன்றுவதற்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் சாத்திர நூலாகத் திகழ்ந்தது திருமந்திர நூலாகும்.

யோகம், மந்திரம், சக்கர வழிபாடு, பிராணாயாமம் என்பன குறித்து திருமூலர் தான் முதன் முதலாக தாம் பாடிய திருமந்திரத்தில் பதிவு செய்கிறார்.

தமிழகத்தில் ஆன்மிகத்தில், புதிய மரபைத் தோற்றுவித்த

சித்தர் அவர். பிற்காலத்தில் தோன்றிய சித்தர் நெறிக்கு வித்தூன்றியவர் அவரே.

அவரது கருத்தின் தாக்கம் பதினெண் சித்தர்களிடம் தொடங்கி, தாயுமானவர், வடலூர் வள்ளலார் வரை எதிரொலிப்பதைக் காணலாம். தமிழ் நூல்களில் தலை சிறந்த நூல்களாகக் கருதப்படுபவை மூன்று. திருக்குறள், திருவாசகம் இவற்றோடு திருமந்திரமும் ஆகும்.

இவை உலக வாழ்க்கைக்கும், மறுமை வாழ்க்கைக்கும் வழிகாட்டுவன ஆகும்.

'தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம், சாத்திரங்களில் சிறந்தது திருமூலரின் திருமந்திரம், இவற்றை ஊன்றிப் படிக்கவும்' என்று பரிந்துரைக்கிறார் வள்ளற் பெருமானார்.

இந்நூல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும், அன்பின் சிறப்பையும், இறை பக்தி, சமய வாழ்க்கை, யோக முறைகள், குருவின் பெருமை குறித்தும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. அன்புதான் இறைவன் என்பதை திருமூலர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

அனுபவம் இல்லாதவர் அன்பையும், இறைவனையும் பிரித்து வேறென்பர்.

ஆனால், அவர்கள் அன்பு தான் சிவம் என்பதை அறியவில்லை.

**"அன்பு சிவம் இரண்டு என்பர்அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருத் தாரே"**

என அன்பு என்பதின் மறுமொழியே சிவம் என்கிறார்.

உலகில் உள்ள மக்கள் அனைவரும் மானிடம் என்னும் ஒரே குலத்தவர் தாம், அனைவருக்கும் கடவுள் ஒருவர் தாம் என்றார்.

**"ஒன்றே குலம் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லை நும்சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மின்"**

என உரத்த குரல் கொடுத்தார்.

மேற்குறித்த திருமந்திரச் சிந்தனையால் ஈர்க்கப்பட்ட பேரறிஞர் அண்ணா 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனும் தாரக மந்திரத்தினை தமது இயக்க கொள்கையாக அறிவித்தார்.

அழியும் தன்மையுடைய உடம்பை யோக சாதனையால் அழியாமல் நிலை நிறுத்தலாம். இறவாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வு பெறலாம் என்பதை திருமூலர் தான் முதன் முதலாக நிலை நாட்டுகிறார்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"**
**"உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"**

என்பன அவர் மந்திர மொழிகள்.

இத்தகைய சிறப்புகள் பெற்ற திருமந்திரப் பாடல்கள் மறைமொழியில், பரிபாஷையில் பாடப் பெற்றவை. மொழியறிந்த எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. மொழிப் புலமை மட்டுமே வைத்துக் கொண்டு இந்நூலைப் பயில முடியாது.

சித்தர்களின் தொடர்பும் ஆன்மிகப் பயிற்சியும் உள்ள அறிஞர் பெருமக்கள் மட்டுமே திருமந்திர நூலின் பொருளை உணர்த்த முடியும்.

தமிழ் நூல்களில் தலைசிறந்த நூலாகக் கருதப்படும் திருமந்திரத்தினை உலகிலுள்ள மக்கள் அனைவரும் படித்து உணர்ந்து பயன்பெற வேண்டும் எனும் உயரிய நோக்கில் தற்போது ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தொழிலதிபரும், அருட்செல்வருமான முனைவர் பொள்ளாச்சி திரு. என்.மகாலிங்கம் அய்யா அவர்களின் சீரிய முயற்சியாலும், கனடாவில் உள்ள பாபாஜி கிரியாயோக மையத்தினர், சென்னை யோக சித்த ஆய்வு மையத்தினர் மற்றும் சென்னை வர்த்தமான் பதிப்பகத்தினரின் உறுதுணையுடனும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

சிறப்பு மிகுந்த திருமந்திர நூலினை உலகெங்கும் உள்ள மக்கள் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் வெளிவரச் செய்த டாக்டர் பொள்ளாச்சி என்.மகாலிங்கம் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன். இந்த சீரிய பணியில் தங்களது பங்களிப்பினை வழங்கியுள்ள பேராசிரியர் டி.என்.கணபதி, திருமந்திரச் செம்மல் டி.வி.வெங்கட்ராமன், பேராசிரியர்கள் டி.என்.இராமச்சந்திரன், எஸ்.என்.கந்தசாமி, டி.பி.சித்தலிங்கையா, திருமதி பிரேமா நந்தகுமார் முதலிய அறிஞர் பெருமக்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

–மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் சென்னையில் 17.1.2010 அன்று நடைபெற்ற விழாவில் திருமூலரின் திருமந்திர ஆங்கில மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட்டு ஆற்றிய உரையின் சுருக்கம்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்



–சென்ற இதழ் தொடர்ச்சி

**ச**ன்னியாசிகளுக்குள்ளே அமுதம் போன்று விளங்கக்கூடிய இராமானுஜர் ஒருநாள் நம்மாழ்வாரின் திருவடியைத் தொழ வேண்டும் என்று எண்ணி தம் அடியார்களுடன் பெருமை பொருந்திய ஸ்ரீரங்கத்தை விட்டு புறப்பட்டு திருமாலிருஞ் சோலையிலே எழுந்தருளியிருக்கும் சுந்தரத்தோளுடையான் என்ற திருநாமம் கொண்ட பெருமாளை வணங்கி அருங்கிருந்து மதுரை மாநகர் அடைந்து அங்கே அருள்பாலிக்கும் கூடலழகரை வணங்கி அதன்பின் அன்னம் போன்ற மெல்லிய நடையை உடைய பூமாலை அணிந்த ஆண்டாளை தொழுவதற்காக ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் பொழுது தெற்கு திசையில் இருந்து ஒரு பக்தர் வடக்கு திசையை நோக்கி செல்வதைப் பார்த்தார். உடனே இராமானுஜர் பல்லக்கை விட்டு இறங்கி அந்த பக்தனை வணங்கி நின்றார். மேலும் என் தந்தை போன்றவரே இப்பொழுது தாங்கள் எங்கே எழுந்தருளுகிறீர் என்று கேட்க அந்த பாகவதரும் இராமானுஜரை நோக்கி தர்மத்தின் கொழுந்து போன்றவரே எமது இருப்பிடம் திருக்கோளூர் என்று அருளிச் செய்தார். உடனே இராமானுஜர் அந்த பாகவதரிடம் நம்மாழ்வார் விரும்பும் திருக்கோளூரை விட்டு தாங்கள் வர காரணம் என்ன என கேட்டார். அதற்கு அவர் "அங்கே குடும்பத்தை நிர்வகிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. எனவே பிழைப்பைத் தேடி வேறு ஊருக்குச் செல்கிறேன்," என்றார்.

இதைக் கேட்ட இராமானுஜர் திருக்கோளூரின் மகிமையை எடுத்துச் சொல்லி திருக்கோளூரில் கழுதை மேய்த்து அதில் கிடைக்கும் கூலியைக் கொண்டு அந்த ஊரிலே வாழ வேண்டியது தானே என்று சொல்லவும் அந்த பாகவதர் உண்மையை உணர்ந்து வடக்கு திசை நோக்கும் எண்ணத்தை கைவிட்டு இராமானுஜருடைய ஸ்ரீவில்லிபுத்தூர் புறப்பட்டுச் சென்றார்.

பின்னர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள்

நாச்சியாரை வழிபட்டு அதன் பின்னர் பாண்டிய நாட்டிற்கு சென்று நவதிருப்பதிகளை வணங்கி திருக்குருகூர் சென்று நம்மாழ்வார் திருவடிகளை வணங்கி மகிழ்ந்தார். திருக்குருகூரில் இருக்கும் பொழுது நம்மாழ்வாரின் பெயரை சூட்டக்கூடிய அளவிற்கு ஒரு பிள்ளை வேண்டும் என்று எண்ணி அங்கே உள்ள அந்தணரிடம் ஒரு சிறுவனை பெற்று அச்சிறுவனுக்கு மஞ்சள் நீராட்டி ஸ்வீகாரம் எடுப்பதுபோல அச்சிறுவனைப் பெற்று அவனுக்கு "திருக்குருகைப் பிரான்பிள்ளான்" என்று பெயரிட்டார். பின்னர் திருக்குறுங்குடி முதலிய ஸ்தலங்களை வழிபட்டு ஸ்ரீரங்கம் வந்தடைந்தார்.

"இப்படி நிகழ்ந்தபின் எதிகள் நாயகர்
செப்பரும் தமரொடு நம்பி சேவடி
தப்பற வணங்கிமீண் டமரர் தாம்
தொழ
அப்பனே விடையென அரங்கம்
மன்னினார்''

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 793.

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் இராமானுஜர் மிகவும் பக்தி கொண்டிருந்த அகளங்கனாவான் என்ற மன்னன் இம்மண்ணுலகை விட்டு நீந்து வைகுண்டம் அடைந்தார். அதன் பின்னர் கிருமி கண்ட சோழன் மேற்படி நாட்டை ஆண்டு வரும்பொழுது பரமசிவனின் தத்துவமே மேலான தத்துவம் என்றும் மற்றவை எல்லாம் தாழ்ந்தவை என்றும் எண்ணம் கொண்டு சிவனே பரம்பொருள், அல்லாத தெய்வங்கள் எல்லாம் தாழ்ந்தவை என்று குறித்து ஓலையிலேயே எழுதிக் காட்டி அவ்வோலையிலே கையெழுத்து இடுங்கள் என்று வற்புறுத்தி கையெழுத்து இடச் செய்து வந்தான். அவனுக்கு பயந்து பலரும் சிவனே பரம்பொருள் என்று கையெழுத்திட்டனர். அம்மன்னனுக்கு எப்படியாவது இராமானுஜரை பிடித்துக் கொண்டு வந்து சிவனே பரம்பொருள் என்று ஓலையிலேயே கையெழுத்து இடச் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டு அம்மன்னன் திருவானைக்காவுக்கு வந்தார்.

அங்கிருந்து கொண்டு ஸ்ரீரங்கத்திற்கு ஏவலாளர்களை அனுப்பி இரகசியமாக இராமானுஜரைக் கொண்டு வரும்படி ஏவல் ஆளை ஏவி விட்டார். அந்த ஏவல் ஆளும் இராமானுஜரின் மடத்தை சுற்றி வளைத்தனர். அப்பொழுது இராமானுஜர் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு சென்றிருந்தார். தன் ஆச்சாரியரான பெரியநம்பியையும் சீடரான கூரத்தாழ்வாரையும் பிடித்துக் கொண்டு சென்றார்கள். இதனைக் கேள்வியுற்ற இராமானுஜர் பெரியநம்பிக்கும், கூரத்தாழ்வாருக்கும் ஏற்பட்ட துன்பத்தை எண்ணி மிகவும் மனம் வருந்தி பெருமாளிடம் அரசன் செய்துள்ள செயலுக்கு அடியேன் செய்ய வேண்டியது என்ன பெருமாளே

''கூரத்தாழ்வாரையும், பெரியநம்பியையும் கொண்டு போனார்களே'' அவர்களை மீட்க ஒரு வழி சொல்லுங்கள் என்று வேண்டினார்.

"அடியேன் செய்ய வேண்டுவதென்
அரசன் செய்கைக் காழ்வானை
நெடிபோய் பெரியநம்பியையும்
கொண்டு போனான் நிகரில்லாக்
கடிசேர் துளபத் திருத்தாராய் கற்பித்
தருள்க இதற்கொன்று
நாடியார் பொழுதில் என நின்றார்
நோற்ற நோன்பின் மிக்க பிரான்''

ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 803.

அதற்கு பெருமாள் பதிலாக நமக்கு ஒருவர் துன்பம் செய்து நிந்திப்பார்களேயானால் அந்த விடத்தை விட்டு நீங்கி செல்வதே நல்ல செயலாகும். கூரத்தாழ்வாருக்கும், பெரியநம்பிக்கும் துன்பம் ஏற்படக் காரணமாக இருந்தவர் அரசன் என்பதால் ஸ்ரீரங்கத்தை விட்டு மேலைநாடுக்கு செல்வதே நலம் என பெருமாள் எடுத்துரைத்தார். அதற்கு இராமானுஜர் கூரத்தாழ்வாரும், பெரிய நம்பியும் அனுபவிக்கும் தண்டனையை

நானும் அனுபவிக்க வேண்டும். எனவே, நானும் அரசனிடம் செல்வேன் என்றார்.

இதைக் கேட்ட பெருமாள் இராமானுஜரைச் சுற்றி நின்ற அடியவர்களைப் பார்த்து இமைப் பொழுதும் காலம் தாழ்த்தாமல் இராமானுஜருக்கு வெள்ளை ஆடை உடுத்தி அவரை மேலை நாட்டிற்கு அழைத்துப் போங்கள் என்று அருளினார்.

"கொண்டு போமின் மேனாட்டில் கூறு
நொடியும் தாழாதே
தொண்டக் குழாங்கள் விரைவிலெனச்
சுருதி முதல்வன் அருள் செய்யப்
புண்டரீகக் கண்ணெம்மான்
புகன்றபடியே திருவரையில்
பண்டு சாத்தும் காடாயம் வாங்கி
வெள்ளைப் பரியட்டம்".

–ஸ்ரீராமானுஜ வைபம் பாடல் 806.

பெருமாளின் கட்டளைப்படி இராமானுஜரின் சீடர்கள் இராமானுஜருக்கு வெள்ளை ஆடை உடுத்தி ஸ்ரீரங்கத்தில் இருந்து குறுக்குப் பாதையில் இராமானுஜரை மேலை நாட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

இதனைக் கேள்விப்பட்ட சோழ மன்னன் இராமானுஜரைப் பிடித்து வரும்படி தன் படை வீரர்களை அனுப்பினார்.

திருமாலின் பெருமை மிக்க தொண்டர்கள் புடைசூழ மேலை நாட்டிற்கு சென்று கொண்டிருக்கும் இராமானுஜர் தம்மை பிடிப்பதற்காக சோழ மன்னின் படைகள் பின்தொடர்வதை அறிந்து, அவர்கள் இராமானுஜரை பின்தொடர்ந்து வராவண்ணம் தன் கையில் மணலை அள்ளி வாரி தான் நடந்து வந்த பாதையின் குறுக்கே தூவி பெரியாழ் வாரின் திருமொழியாகிய "கொடுமை செய்யும் கூற்றமும் என் கோலாடி குறுகப்பெறாது'' என்று சொல்லி மணலைத் தூவி தொடர்ந்து நடைபயணம் மேற்கொண்டார்.

இராமானுஜரைத் தொடர்ந்து வந்த சோழ மன்னனின் படைகள் அந்த மணலை மிதித்ததும் கண் தெரியாமல் தடுமாறி விழுந்தார்கள்.

ஏதோ மந்திரம் போட்டு நம் கண்ணை மறைத்து விட்டான். ஐயோ இந்த நோயை தீர்ப்பவர் யார்,'' என்று அழுது விழுந்தார்கள்.

ஒப்பற்ற பெருமையுடைய இராமானுஜர் கடுமையான காடுகளை எல்லாம் கடந்து பல மலைகள் ஏறி ஆறு நாட்கள் உண்பதையே மறந்து வேடவர்கள் வசிக்கும் ஊரைச் சென்றடைந்தார்.

(தொடரும்)

–பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, பொள்ளாச்சி வட்டம்.


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# அருள் தரும் அருவுருவத் திருமேனி (லிங்கம்)

**சி**வ பரம்பொருள் ஏற்று அருளும் மூன்று திருமேனிகளான அருவம், உருவம், அருவுருவம் ஆகியவற்றில் அருவுருவத் திருமேனியே லிங்கம். அனைத்து சிவாலயங்களிலும் மூலவராயிருந்து அபிஷேக ஆராதனைகளை ஏற்று அருளும் மூர்த்தியே சிவ லிங்கம். ஆன்மாக்களின் தியான பாவனா நிமித்தம் இறைவன் ஏற்று அருளும் திருமேனியே இது. யுக முடிவில் பிரளய காலத்தில் உலகமும் ஆன்மாக்களும் ஒடுங்குவதற்கும் மீண்டும் தோன்றுவதற்கும் ஆன இடமே லிங்கம். லிங்கம் என்ற சொல்லில் 'லிம்' என்றால் ஒடுங்குதல், 'கம்' என்றால் தோன்றுதல் என்றும் பொருளாகும்.

சிவலிங்கங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று 'பரார்த்த லிங்கம்' இரண்டாவது 'இஷ்ட லிங்கம்'. பரார்த்த லிங்கங்களில் ஐந்து வகைகள் உண்டு. 1.மானுட லிங்கம் (மனிதர்களால் நிறுவப்படுவது), 2.ஆரிட லிங்கம் (இருடிகளால் நிறுவப்படுவது), 3.தைவீக லிங்கம் (விஷ்ணு முதலிய தெய்வங்களால் நிறுவப்படுபவை), 4.காண லிங்கம் (விநாயகர், முருகன் ஆகியோர்களால் நிறுவப்படுபவை), 5.சுயம்பு லிங்கம் (தானே தோன்றுபவை). இந்த வரிசையில் மானிட லிங்கம் முதல் அடுத்தடுத்து ஒவ்வொரு வகை லிங்கமும் சிறப்பில் மேம்பட்டு, இறுதியாக சுயம்பு லிங்கமே அனைத்திலும் உயர்வானது. தீட்சையின்போது ஆசாரியார் சீடனுக்கு வழங்கும் லிங்கம் இஷ்ட லிங்கம் எனப்படுகிறது.

மகா சிவராத்திரியின்போது இரவு 11.30 மணி முதல் 12.30 மணி வரையிலான காலம்



'லிங்கோத்பவ காலம்' எனப்படுகிறது. ஈசன் லிங்க வடிவில் தோன்றிய காலம் இது. 'உற்பவம்' என்றால் வெளிப்படுதல் என்று பொருள். அதாவது, லிங்கம் வெளிப்பட்ட (தோன்றிய) காலம் என்றாகிறது. மாலும் அயனும் சிவபரம் பொருளின் அடி முடி காண முடியாதபோது, அவர் தம் மயக்கத்தைத் தீர்க்கும் பொருட்டு 'யாம் இங்குள்ளோம்" என்று கூறி, மாபெரும் தழல் தூணாக – பேரொளிப் பிழம்பாக (வடமொழியில் கூறுவது போல 'ஜோதி லிங்கமாக)த் தோன்றி அருளினார் எம்பெருமான். அவர்களின் மயக்கம் தெளிந்து பக்தியுடன் தொழுது நின்றபோது 'லிங்கோத்பவராக' வெளிப்பட்டு காட்சி தந்தருளினார் இறைவன்.

கர்னாடக மாநிலத்தில் உள்ள கோகர்ணம் என்ற தலத்தில் உள்ள கோகர்ணநாதர் என்று குறிப்பிடப்பெறும் லிங்கம் பசுவின் காது போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது. இராவணனுக்கு சிவபெருமான் தம் திருமேனியில் இருந்து உருவாகித் தந்த சிவலிங்கமே இது. முப்பத்து முக்கோடி நாட்கள் வாழ்ந்த இராவணன் ஒவ்வொரு நாளும் ஒரு லிங்கம் வீதம் புதிதாக அமைத்து வழிபட்டதால் இலங்கையில் 33 கோடி லிங்கங்கள் இருந்தன என்றும், ராம – ராவண யுத்தத்திற்குப் பின் இலங்கை அழிந்தபோது அவை யாவும் கடலில் மூழ்கி விட்டன என்றும் சொல்லப்படுகிறது.

லிங்கத்தின் பாணப் பகுதியில் 108 லிங்கங்கள் அமைந்திருப்பது அஷ்டோத்திர லிங்கம் ஆகும். 1000 முகங்கள் கொண்டிருப்பின் அதை சகஸ்ரலிங்கம் என்றும் 1008 முகங்கள் இருப்பின் அதை அஷ்ட சகஸ்ர லிங்கம் என்றும் சொல்கின்றனர். பாணப் பகுதியில் வெவ்வேறு எண்ணிக்கையிலான பட்டைகள் அமைந்து இருப்பவனவற்றை தாரா லிங்கங்கள் என்பர்.

சென்னை திருவொற்றியூரில் நிகழ்ந்த ஒரு அற்புதம் ஈண்டு நாம் நினைவு கூறத்தக்கது. ''திருவொற்றியூர் மண்ணெல்லாம் வெண்ணீறு'' என்று பட்டினத்தார் பாடியுள்ளார். வள்ளல் ராமலிங்க அடிகளார் ஒரு சமயம் அங்குள்ள பட்டினத்தார் கோயிலுக்குச் சென்றிருந்தபோது, அங்கு வந்திருந்த மூதாட்டி ஒருவர் அவரிடம் இதுபற்றி விளக்கம் கேட்க, அடிகளாரும் உடனே கீழே குனிந்து ஒரு பிடி மண்ணை எடுத்து மூதாட்டியிடம் கொடுத்தார். "இந்த பிடி மண்ணை கையில் வைத்து மூடிக் கொண்டு பிறகு திறந்து பாருங்கள்," என்றார். அவ்வண்ணமே செய்த மூதாட்டிக்கு ஒரு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. என்ன ஆச்சரியம், அவரின் கையில் இருந்த மண் எல்லாம் சிறு சிறு லிங்கங்களாக மாறியிருந்தன.

சிவலிங்கத்தின் மேல் பாகம் சிவ ஜோதி என்றும், நடுப்பாகம் அருள் ஜோதி என்றும், அடிப்பாகம் ஆத்ம ஜோதி என்றும் சொல்வர். வெள்ளியால் செய்யப்பட்ட லிங்கம் ராஜத லிங்கம் என்று அழைக்கப்படுகிறது. நம் நாட்டிலேயே மிகப் பெரிய அளவிலான லிங்கம் கங்கை கொண்ட சோழபுரத்தில் பெருவுடையார் கோவிலில் உள்ளதே ஆகும். சோழ மன்னன் முதலாம் ராஜேந்திரனால் கட்டப்பட்டது இத்திருக்கோயில். இந்த கோயிலை யுனெஸ்கோ அமைப்பு ஒரு உலக பாரம்பரிய நினைவுச் சின்னமாக அறிவித்துள்ளது.

இங்கு ஐப்பசி பவுர்ணமி அன்று நடைபெறும் அன்னாபிஷேகம் மிகவும் பிரசித்தம். 108 மூட்டை அரிசி பயன்படுத்தப்பட்டு அன்னத்தை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது போக மீதியை கொள்ளிடம் ஆற்றில் மீன்களுக்கு உணவாக இட்டு விடுகிறார்கள்.

இதன் கோபுரத்தையும் தஞ்சையில் இவரது தந்தையார் ராஜ ராஜ சோழன் கட்டுவித்த 'பெரிய கோயில்' கோபுரத்தையும் ஒப்பிட்டு சுவையான ஒரு விளக்கம் தரப்படுகிறது. தஞ்சைக் கோபுர அழகில் ஆண்மையின் கம்பீரமும், கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் கோபுரம் சற்றே சாய்ந்து இருப்பதால் அதில் பெண்மையின் மென்மையும் காணப்படுவதாக கூறப்படுகின்றது என்பதே அது.

திருநல்லூர் கோயிலில் (அப்பர் பெருமானுக்கு இறைவன் திருவடித்தீக்கை வழங்கியருளிய திருத்தலம்) உள்ள இறைவன் பஞ்ச வர்ணேஸ்வரர் என்று

அழைக்கப்படுகிறார். இந்த சிவலிங்கத் திருமேனிக்கு ஒரு சிறப்பு உண்டு. ஒரு நாளில் ஐந்து முறை நிறம் மாறுகிறது இது.

அன்னை பார்வதி தேவியார் நிறுவி வழிபட்ட சிவலிங்கங்கள் தேவி லிங்கங்கள் எனப்படுகின்றன. இவ்வகையில், காஞ்சீபுரத்தில் மண்ணாலும், திருவானைக்காவில் தண்ணீராலும், சிவலிங்கங்கள் அமைத்து வழிபட்டார் அன்னை. காஞ்சீபுரத்தில் அமைக்கப்பட்ட லிங்கத்தில் அன்னை தழுவிக் கொண்டதால் ஏற்பட்ட வளைத் தழும்பும் முலைத் தழும்பும் இன்றும் காணலாம் என்பர்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள சக்தி முற்றம் என்ற தலத்தில் அன்னையார் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டதோடு அதற்கு முத்தமும் கொடுத்து மகிழ்ந்ததால் அத்தலத்திற்கு சக்தி முத்தம் என்றே பெயராயிற்று.

சைவத்தில் ஒரு சிறந்த வழிபாட்டு முறையாகக் கருதப்படுவது 'குரு லிங்க சங்கம' வழிபாடு என்பதாகும். அதாவது, குருவையும், எல்லா சிவாலயங்களிலும் மூல மூர்த்தியாய் இருக்கும் லிங்கத் திருமேனியையும் சிவனடியார்களையும் வணங்கி வழிபட வேண்டும் என்பதே அது.

ஆதி சங்கரர் கயிலை மலையில் சிவபெருமானிடம் இருந்து பெற்று வந்த சிவலிங்கங்கள் ஐந்து. சந்திர மௌலீஸ்வர் என்பது இவற்றின் பொதுவான பெயர். இவை ஐந்து வெவ்வேறு தலங்களில் ஐந்து சிறப்புப் பெயர்களில் அமைக்கப்பட்டுள்ளன. பத்திரிகாசிரமத்தில் முத்தி லிங்கம், நேபாளத்தில் உள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தில் வரலிங்கம், சிதம்பரத்தில் மோட்ச லிங்கம், சிருங்கேரியில் போக லிங்கம், காஞ்சீபுரத்தில் யோக லிங்கம் என்றும் இவை குறிப்பிடப் பெறுகின்றன.

தம்மை வழிபடும் பக்தர்களின் மனப் பக்குவம், ஆன்மீகத் தேர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்ப திருவுருவம் ஏற்று அருள் புரிகிறார் எம்பெருமான். சிவ நெறியில் துவக்க நிலையில் உள்ளோருக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப உருவத் திருமேனிகளைத் தாங்கி அருள் புரிகிறார். இன்னும் சற்று அதிகம் ஆன்மீக வளர்ச்சி கண்டோருக்கு அருவுருவத் திருமேனியான லிங்கத் திருமேனி தாங்கி அருள் புரிகிறார். நம் போன்ற பெரும்பாலான 'சகலர்களுக்கு' இந்த நிலையே ஏற்படுகிறது. ஞான நெறியில் நிற்கும் சான்றோர்களுக்கோ, அவன் அருவத் திருமேனியில் நின்று அருள் புரிகிறான்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு ஆன்மீக வரலாற்றுச் சிறப்பு ஒன்று உண்டு. செல்வச் செறுக்கும், கல்விச் செறுக்கும் கொண்டோர் சிவபரம் பொருளை அறியவியலாதென்ற உண்மையை நிறுவுவதற்காக, மாலும் அயனும் சிவனின் அடி முடியைக் காணவியலாமல், சிவபெருமான் அக்கினிப் பிழம்பாய் லிங்கத் திருமேனியில் தோன்றியதே இலிங்கோற்பவ மூர்த்தி. இந்நிகழ்ச்சி நடந்தேறியது திருவண்ணாமலையில். அனைத்து சிவாலயங்களிலும் லிங்கோத்பவர் பிரதான சிவ சந்நிதியின் பின்புறம் பிரம்மா விஷ்ணு உருவங்களோடு நின்று அருள் புரிவதைக் காணலாம்.

சிவாலயத்தில் மூலஸ்தானத்தில் உள்ளது சூட்சும லிங்கம். அதன் மீது உள்ள கோபுரம் ஸ்தூல லிங்கம். ஆகவே தான், "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்று சொல்கின்றனர் பெரியோர். மெய்கண்டாரின் சிவஞான போதம், சிவாலயத்தையே சிவனாகக் கருதி வழிபட வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

நாமும் நாம் செல்லும் வழியில் உள்ள சிவாலயங்களைக் கண்ணுற்றதும் அதன் கோபுரத்தை வணங்குவதை ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளோம் அல்லவா! அருவத் திருமேனியில் ஆன்மாக்களைப் 'பொது'வாக நோக்கி நிற்கும் இறைவன், சதாசிவம் என்று அழைக்கப்படும் இந்த அருவுருவத் திருமேனியில் 'சிறப்பாக' நோக்கி நிற்கிறான்.

இந்த சிவ லிங்கத் திருமேனியில் நின்றே, தன்னை வழிபடும் ஆன்மாக்களுக்கு அருளை வழங்குகிறான் எம்பெருமான். சிவலிங்கத் திருமேனியை உள்ளன்போடு வழிபட்டு எம்பெருமானின் திருவருள் நம் அனைவருக்கும்கிட்ட வணங்கி அமைகிறேன்.

**சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம்**
**டாக்டர் எம்.ஆர்.சந்தானம்.**

–சென்ற இதழ் தொடர்ச்சி

திடவிசும் பெரிவளி நீர்நிலம்
இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய்
அவையவைதொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும்
பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசுரனே

## எங்கும் நிறைந்தவன்

முன் பாசுரங்களில், ''எல்லாம் எம்பெருமானே" என்று சொல்லியிருப்பதால், ஆழ்வார் அத்வைதம் பேசுகிறாரோ என்று (அவைகளின் சேர்க்கையே காரணமான்) எல்லா பொருள்களும் தானேயாகிய இறைவன் அவ்வப் பொருள்கள் தோறும், உடலுக்குள் இருக்கும் உயிரைப் போன்று மறைந்து எங்கும் பரந்தவனாய் ஒளிமிக்க வேதத்துக்குள் தோன்றுபவன் ஆவான்.

வேதங்களில் அபேத சுருதி, பேத சுருதி, கடக சுருதி எனப்படும் மூவகை வாக்கியங்கள் காணப்படுகின்றன.

முன் சொல்லப்பட்ட பாசுரங்களான 'நாமவன்' (4). 'நின்றனர்' (6) ஆகியவை, அபேத சுருதியின் பொருளாக விளங்கும். அதாவது, எல்லாம் 'பிரம்மம்' என்ற ஒன்றே உண்மை. இரண்டாவது வேறு ஒன்றும் இல்லை என்ற

# கண்டேன் கமல மலர்ப்பாதம் (கோயில் திருவாய்மொழி)

தோன்றலாம். அதாவது எம்பெருமான் ஒன்று தான் உண்மை. மற்றவை எதுவும் இல்லை; பொய், என்ற மாயாவாதம் சரி என்று சொல்கிறாரோ என்ற சந்தேகம் எழலாம்.



அந்த சந்தேகத்தை நீக்கி, ஆழ்வார் இந்தப் பாசுரத்தில் விசிஷ்ட அத்வைதத்தை தெளிவாகவும், அழுத்தமாகவும் நிலை நிறுத்துகிறார். எல்லா உயிருள்ள, உயிரில்லாத பொருள்கள் எம்பெருமான் சரீரமாகவும், அவன் சாரீரமாகவும் (அவைகளைத் தாங்கும் உயிராகவும்) இருக்கும் (சம்பந்தம்) – ஐக்கியம் இங்கே நிரூபிக்கப்படுகிறது.

திடமான ஆகாயமும், நெருப்பும், காற்றும், நீரும், நிலமும் ஆகிய இந்த பஞ்ச பூதங்களையும் காரணமாகக் கொண்ட

அத்வைத தத்துவம்.

'இலனது' (3), 'அவரவர்' (5) என்ற

–முனைவர் டிஎஸ்.ராமஸ்வாமி

பாசுரங்கள் பேத சுருதியின் பொருளாக விளங்கும். அதாவது, 'பிரம்மம்' 'உலகம்' ஆகிய இரண்டும் உண்மையே என்கிற த்வைத தத்துவம்.

'திட விசும்பு' என்கிற இத்திருப்பாசுரம் அபேதச் சுருதி, பேதச் சுருதி ஆகிய இரண்டையும் சேர்த்துக் காட்டும் கடக சுருதி – அதாவது, எம்பெருமான் என்கிற பிரம்மம் உலகைப் படைத்து, அதில் உள்ள எல்லா பொருள்களுக்கும் உள் உயிராய் நின்று இயங்கும் விசிஷ்டாத்வைத தத்துவம்.

இந்தப் பாசுரம் சரீர – ஆத்ம உறவையும் விளக்குகிறது.

'இந்த உயிர்களை எல்லாம் உடலாகக் கொண்டு இருக்கிற நான், உயிர்களுக்குள் உயிராகப் புகுந்து இவற்றிற்குப் பெயர்களையும், உருவங்களையும் உண்டு பண்ணுகிறேன்' (சாந்தோக்யம் 6.3)

பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த உடல்களிலே உள்ள உயிர்கள் வழியாக இறைவன் உள்ளே புகுந்து இவை பொருளாதல், பெயர் பெறுதல், உண்டாகும்படி செய்தல், மற்றும் இவை எல்லாம் 'தான்' என்னும்படி இருப்பினும், 'உயிர்களுக்குள் வியாபித்து, அவ்வுயிர்களைக் கட்டளை இடுபவனாய், எல்லா உயிர்களுக்கும் தானே உயிராய் (ஆத்மாவாய்) இருக்கிறான்' (தைத்ரீயம்).

மண் குடமாகிறது.

ஆனால், மண்ணே குடமாகி விடாது. இறைவன் உயிர்களைப் படைத்து, உட்புகுந்து, தாரகனாய் (உயிரைத் தரித்துக் கொண்டிருப்பவனாய் நியாமகனாய், இதைச் செய், அதைச் செய் என்று ஏவுகிறவனாய்) சேஷியாய் (தன் விருப்பப்படி ஜீவனை ஆட்டிப் படைப்பவனாய்) நினைவு எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு செல்வதால், சரீர – உயிர் (ஆத்ம) உறவு சொல்லப்பட்டது.

பஞ்ச பூதங்களில் ஆகாயம் என்பது நீர், நெருப்பு, காற்று, மண் ஆகிய ஏனைய நான்கு பூதங்களுக்கும் முன்தோன்றி, அவை அழிந்த பின்னும் சில காலம் நின்று பின்னரே அழியக்கூடியது.

ஆகாயம் என்ற உறுதியான பூதத்தையே அடிப்படையாகக் கொண்டு, ஏனைய பூதங்களான நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகியவற்றையும் பல்வேறுபட்ட சேர்க்கைகளினால் எல்லாப் பொருட்களும் படைக்கப்பட்டன.

ஆகாயம் என்பது வானமும், நம்மைச் சுற்றியுள்ள எல்லா வெற்றிடங்களும்.

ஆகாயத்தில் 'ஈதர்' என்ற சக்தி வாய்ந்த கண்ணுக்குத் தெரியாத பொருளைக் கண்டுபிடித்து, ரேடியோ, டெலிவிஷன் போன்ற பல பயனுள்ள பொருள்களை நமக்குக் கொடுத்த விஞ்ஞானிகள், இன்னும் பல விதமான சக்திகள் உறுதிமிக்க ஆகாயத்தில் மறைந்து இருப்பதாகக் கூறுகிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன முடிவே கிடையாது

ஆனால், ஆழ்வார் தன், ஞான, பக்திகளினாலேயே 'உடல் மிசை உயிரென கரந்தெங்கும் பரந்துளன்' என்று உறுதியாக அருளிச் செய்கிறார்.

''பரம்பொருளிடமிருந்து ஆகாயம் தோன்றியது (தைத்ரீயம்)''

''பல பொருள்களாக விரிகிறேன்'' (தைத்ரீயம்)

இறைவனின் இந்த மலர்ச்சியே இந்தப் பரந்த உலகம். எல்லாப் பொருள்களிலும் தனித்தனியே குறைவு அற நிறைந்து நிற்பவன். ஒவ்வொரு உடலுக்கும் உயிர் உல்லாசமாக (தாரகனாய், நியாயமகனாய், சேஷியாய்) இருப்பது போன்று, ஒவ்வொரு உயிர்க்கும் இறைவன் எல்லாமாக இருந்து நடத்துகிறான். குறைவு ஏதுமின்றி நிறைந்து நின்று வழிகாட்டுகிறான்.

இறைவன் உயிர்களால் அறிய முடியாதவன் என்று உபநிடதம் (பிரஹதாரண்யம்) கூறுவது போல், புறக்கண்களால் காண முடியாதவனாய் இருந்து, உள்ளும், புறமும் எங்கும் நிறைந்து இருக்கிறான் என்பது சத்தியப்ரமாணம்.

ஆதிகாலத்தில் இறைவன் உயிர், உடல், உலகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியிலேயே, தியானம் செய்து கொண்டு வாழ்நாளை முழுவதுமாக கழித்து வந்த ரிஷிகள், முனிவர்கள், ஞானிகள், பல பெரியோர்கள்

எந்த பயனையும் எதிர்பாராமல் வழிவழியாக, வாயால் சொல்லியும் அவைகளை காதுகளால் கேட்டுச் சொல்லி வந்த 'சுடர்மிகு (ஒளி பொருந்திய) வேதங்கள் (சுருதி)' ஆழ்வாரின் இந்தப் பாசுரத்துக்கு ஆதாரமாக அமைந்தன.

வேதங்கள் (எந்த ஒருவனாலும்) புருஷனால் படைக்கப்பட்டவை அல்ல; எம்பெருமானால் எல்லோரும் பயன்பெற அளிக்கப்பட்டவை. ஆகவே, அவை குற்றமற்றவை; ஒளி மிகுந்தவை.

எப்போதும் ஒரே விதமாய் ஒன்றோடொன்று பிணைக்கப்படும், உச்சரிக்கப்படும் சப்தங்களின் கூட்டம். ஆகவே, வேதங்கள் வைதீக சப்தம் என்பர். மற்றவை லௌகீக சப்தம் – புதிது, புதிதான சப்தம். வேதம் 'ஏட்டில் எழுதப்படாமல், ச்ரவண பரம்பரையாக (வாய்வழியாக) சொல்லப்பட்டு வருவதால் சுருதி எனப்பட்டது. ஆரம்ப காலங்களில் வாய்மொழியால், வழிவழியாய் வந்தவை. ஆகவே, ஆழ்வாரின் இப்பாசுரம் 'திடவிசும்பு' என்றாற்போல் மற்றெல்லாவற்றிலும், உறுதியான, வலுவான, பொருள் பொதிந்த அடித்தளம்.

*(8)*

*சுரரறிவருநிலை விண்முதல் முழுவதும்*
*வரன்முதலாயவை முழுதுண்டபரபரன்*
*புரமொருமூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து*
*அரனயனென உலகழித்தமைத்துளனே*

**அழித்தலும் அவன் தொழிலே**

முன்னர், படைத்தல், அளித்தல் (காத்தல்) அவன் தொழில் என்றார். இங்கே 'அழித்தலும் அவன் உரிமையே' என்கிறார். அதாவது. படைத்தல், காத்தல் போன்று அழித்தலும் அவன் இட்ட வழக்கு என்கிறார்.

பிரமன் முதலிய தேவர்களாலும் அறிந்து கொள்ள அரிய நிலையுடைய மூலப்பகுதி (மூலப்ரக்ருதி) தொடக்கமாக உள்ள எல்லாவற்றிற்கும் காரணமான எம்பெருமான், உலகம் முழுவதும் உண்டு. அழிக்க வேண்டிய நேரத்தில் அழித்தவன். சிவனாக இருந்து ஒப்பற்ற முப்புரங்களையும் அழித்துப்பின், உலகங்களையெல்லாம் அழித்துப் பின் பிரமனாக இருந்து தேவர்களுக்கு ஞானத்தை உபதேசித்தும், பின்னர் உலகங்களைமீண்டும் படைத்து, எல்லா தேவர்களுக்குள் உயிராய் தங்கி, எல்லாவற்றையும் தானே நடத்துகிறான்.

முன் பாசுரங்களில், வேதங்களால் பேசப்பட்ட துணிந்த பொருள் அவனே என்றும் எல்லா பொருள்களுக்கும் ஆத்மாவாக நிற்பவன் அவனே என்றும் கூறுகிறார்.

அப்படியானால், திரிபுரம் எரித்தவன் சிவன் என்றும், உலகம் படைத்தது பிரமன் என்றும் சொல்கிறார்களே, அப்படியிருக்க எம்பெருமானே எல்லாம் செய்கிறான் என்பது பட்சபாதம் அல்லவா?

அல்ல: பிரமாணங்களை ஆராய்ந்தால், அவை என்ன சொல்கிறதோ, அதைத்தான் சொல்கிறார். தேவர்கள் உட்பட எல்லோர்க்கும் அந்தர்யாமியாக உள் உறைபவனாக இருந்து இயக்குகிறான் இறைவன் என்பது பிரமாணம் என்கிறார்.

'மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ'

–திருவாய்மொழி 8–1–5

"மிக்க ஒளியுடைய உருத்திர பகவானுக்குத் திருமால் உயிராக இருக்கின்றார்: ஆதலால், அந்த சிவபெருமானுடைய வில்லின் நாணைத் தொடும் ஆற்றலைக் கொண்டான்"–வியாச முனிவர்–பாரதம்–கர்ண பர்வம்.


"நாராயணன் உலகங்களையெல்லாம் படைப்பதற்கு முன்னர் பிரமனைப் படைத்தவன்; அப்பிரமனுக்கு வேதங்களைக் கற்பித்தான்"– சுவேதாஸ்வதரம்

"பிரமன், சிவன் என்னும் இவர்கள் இருவரும் தேவர்களுக்குள் தலைமை பெற்றவர்கள்; இறைவன் தெளிந்திருந்த காலத்திலும், கோபத்துடன் இருந்த காலத்திலும் உண்டானவர்களாக எண்ணப்படுகிறார்கள். இவர்கள் அவ்விறைவனால் காட்டப்பட்ட வழிகளை உடையவர்களாய் படைத்தல், அழித்தல் ஆகிய காரியங்களைச் செய் கிறார்கள்"– பாரதம்– சாந்தி பர்வம் 169.

–(தொடரும்)

திருக்கடிகை (சோளிங்கபுரம்)

# அருள்மிகு லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருக்கோயில்



திருக்கடிகை எனும் சோளிங்கபுரம் தமிழகத்தில் வேலூர் மாவட்டம், வாலாசா வட்டத்தில் அரக்கோணம் ரெயில் நிலையத்திலிருந்தும், திருத்தணி ரெயில் நிலையத்திலிருந்தும் 27 கி.மீ., தொலைவில் அமைந்துள்ள புனிதத் திருத்தலமாகும்.

சோளிங்கபுரம், அருள்மிகு லக்ஷ்மி நரசிம்ம சுவாமி திருக்கோயில் மூன்று தனிப் பெரும் சந்நிதிகள் உடையது.

**தலச்சிறப்பு:** இத்திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும், தொண்டை நாட்டு வைணவ திருப்பதிகள் 22-ல் ஒன்றாகவும், பிரார்த்தனை திருத்தலமாகவும் விளங்கி வருகிறது. இத்தல எம்பெருமான்களை ஸ்ரீநம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரால் மங்களாசாசனம் (பாடல் பெற்றி) செய்யப் பெற்ற திருத்தலமாகும்.

புராணப் பெயர் கடிகாசலம், ஆழ்வார்கள் திருக்கடிகை எனப் போற்றினர். அழைத்தது ஆசார்யார்கள் சோளசிம்மபுரம் என்றும், சைவர்கள் சோழலிங்கபுரம் என்றும். தற்காலத்தில் சோளிங்கபுரம், சோளிங்கர் என்று வழங்கப்படுகிறது.

ஏழு மாமுனிவர்களான வர்மதேவர், வசிஷ்டர், கத்யபர், அத்திரி, ஜமதக்னி, கௌதமர், பரத்துவாஜர் ஆகியோர் சிங்கப் பெருமானை சாந்த வடிவில் தரிசிக்க விரும்பி இறைவனை தொழ, எம்பெருமான் ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமி நினைத்த மாத்திரத்தில் ஒரு கடிகை (நொடிப் பொழுது) நேரம் அவர்களுக்கு திருமலையில் காட்சி அருளியதால் இத்தலம் கடிகாசலம் எனப் பெயர் பெற்றது.

ஸ்ரீமந் நாராயணன் எடுத்த அவதாரங்களில் ஒப்பற்று உயர்ந்து



நிற்பது நரசிங்க அவதாரம் என்றால் அதனை மறுத்தல் கூடுமோ? கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந் துள்ளான் என்ற உண்மையைக் கண்கூடாக வெளிப் படுத்திய அவதாரமல்லவோ அது:

பெற்ற தகப்பனே பகையாய் மற்றைய யார் எவரும் எவ்வகையிலும் உதவிட முடியாத நிலையில் பள்ளியில் ஓதிவந்த சிறுவன் பிரகல்லநாதனின் சொல்லை சத்யமாக்க தன்னை அண்டியவர் களை நரசிங்கமாய் அவதரித்து உதவியவனின் மேன்மையும் நீர்மையுமே அடியவர்க்குப் பெரும் பலமாகும். அத்தகைய தெள்ளிய சிங்கமாகிய தேவனே யோக நரசிம்ம சுவாமி திருக்கோயில் கொண் டுள்ளான் திருக்கடிகை மலையில்.



**தீர்த்தம்:** அரக்கோணம் வழியாக சோளிங்கபுரம் நகரின் உள்ளே நுழையும் முன் நிழல் தரும் மரங்கள் அடர்ந்த திருக்குளமும், தோரண வாயிலும் எம்பெருமான் மலைக்கு கைகாட்டுகின்றன. அழகிய அக்குளம் பிரம்ம தீர்த்தம் என்றும் தக்கான்குளம் என்றும் அழைக்கப்பெறும். நான்முகன் சாபதோஷம் நீங்கிய குளமாதலால் பிரம்ம புஷ்கரனி எனவும் வழங்கப்படுகிறது.

தக்கான்குளத்தில் நீராடித் தூய ஆடை தரித்து தூய சிந்தனையுடன் பெரியமலை அடிவாரம் சென்ற அளவில் ஒரு குளம் காணப்படும். இதுதான் நரசிம்ம தீர்த்தமாகும். சிவன் தனது பிரம்மஹத்தி தோஷம் நீங்க நீராடிப் பேறு பெற்ற குளமும் வாமதேவாதிகள் தூய நீராடிப் பேறு பெற்ற தீர்த்தமும் இதுவே ஆகும். இக்குளக் கரையில் தானம், தருமம் செய்வது கயையைக் காட்டிலும் மேலான பலனைத் தருவதாகும்.

திருமலை (பெரிய மலைக்கோயில்)

ஸ்ரீயோக நரசிம்மசுவாமி திருக்கோயில்

நரசிம்ம தீர்த்தத்தில் நீராடியோ, தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொண்டோ மேலும் சில அடிகள் நடந்தால் சிங்கப் பெருமானின் மலைக் கோயில் படிக்கட்டு வரும். அங்குத் தண்டனிட்டு இறைவன் அருள் கொண்டு மலையேறும்போது காணும் அற்புதக் காட்சிகளை எவ்வாறு எடுத்துரைப்பது? 750 அடி உயரமும், 1305 படிக்கட்டுகளையும் கொண்ட பெரியமலை உயரே சென்று மலை உச்சியை அடைந்து கொடிக் கம்பத்தை வணங்கி உள்ளே நுழைந்தால் முதலில் அருள்மிகு அமிர்தபலவல்லித் தாயார் சந்நிதி வரும். ஜகத் ஜனனி யுமான அமிர்தபலவல்லித் தாயார் மூலவர், உற்சவரை வணங்கி வழிபட வேண்டும்.

தாயாரை வணங்கி வழிபட்டு வலமாக வந்தால் பெருமானின் கருவறை, நரசிங்கப் பெருமானின் முன்பே ஸப்தரிஷிகளும், ஆழ்வார், ஆச்சார்யர்களும் அவரையே நினைத்து ஆழ்ந்த தியான நிலையில் இருப்பதைக் காணலாம்.

பெருமாள் சந்நிதியில் நரசிங்கப் பெருமான் யோகா சனத்தில் வீற்றிருக்கிறார். அவரது விமானம் ஹேமகோடி விமானம் எனப்படும். அவருடன் லட்சுமி நரசிம்மன், புக்கான், மறையாய் விரிந்த விளக்கு, மிக்கான எனும் பெருமான்களும், கண்ணனும் சுதர்சன ஆழ்வார் முதலிய உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். யோக நரசிம்மப் பெருமான் திருக்கோலத்தைக் காணக் கண் கோடி வேண்டும்.

இருளான வாழ்க்கைக்கு விடியலாக இருக்கும் கிழக்கு திருமுக மண்டலம், வினைகளை தகர்த்தெறிய வீற்றிருக்கும் திருக்கோலம். நல்வழி காட்டுவதற்கு நாற்கரங்களில் சங்கு, சக்கரம், சங்கடங்களைப் போக்கிட கழுத்தில் சாளக்கிராம மாலை, எங்கும் நானே, எல்லாம் நானே என போதிக்கும் யோகாசனம் புரியும் யோக பீடத் திருக்காட்சி. ஒப்புவமை இல்லாமல் வீற்றிருக்கும் யோக நரசிம்ம சுவாமி சிங்கமும் – கோரை பற்கள், கூரிய நீண்ட நகங்கள், பிடரி மயிர், செவ்வரி ஓடிய திருக்கண்கள் – அழகியான் தானே – அரியுருவம் தானே என்று அழகிய அன்பு பொங்கும் சாந்த சொரூபமாக – பிரகல்லாதனுக்கு காட்சி அருளி சேவை சாதிக்கிறார்.

பேயாழ்வார் இவ்வெம்பெருமானை இளங்குமரன் என்று போற்றிப் புகழ்ந்து வண்டுவளம் கிளரும் வண்பூங்கடிகைப் பதியினை கண்ட பின் எம்பெருமான் திருவைகுந்தம், திருப்பாற்கடல், திருவேங்கடம் முதலான பதிகளையும் கை விட்டு இத்தலத்தே நித்யவாசம் செய்கிறான் என்றார்.

நாம் கலந்த சிங்கமாய்த் தோன்றிய திருமாலை நம்மாழ்வார் அக்காரக்கனியே என்றழைக்கிறார்.

திருமங்கையாழ்வாரும் அக்காரக்கனி என்று அமுதத் திருவாய்மொழியால் அழைத்தார்.

அக்காரம் (வெல்லம்) போன்றும், கனி போன்றும் அடியவர் எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதாக விளங்குகிறான் இறைவன்.

**கடிகாசலம் (சிறிய மலைக் கோயில்)**

**ஸ்ரீ யோக ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில்**

யோக நரசிங்கப் பெருமானின் எதிர்த் திசையில் விளங்குவது சின்னமலை எனும் கடிகாசல மலையாகும். சின்ன மலையில் அஞ்சனையின் மைந்தன் இராம பக்தன் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் கொண்டு உள் ளார். இம்மலைக் கோயில் 350 அடி உயரமும். 406 படிக்கட்டுகளைக் கொண்ட மலைக் கோயிலாகும். ஸ்ரீ யோக நரசிம்ம சுவாமியின் ஆணை பெற்று சங்கு சக்கரங்களுடன் ஸ்ரீ யோக ஆஞ்சநேயனாக வீற்றிருப்பது அதிசயத்தக்க வகையில் அமைந்துள்ளது.

அவரைக் காணுந்தோறும் காண்பவர் தம் சிந்தனையில் எழும் எண்ணங்கள் தான் எத்தனை எத்தனை! மாருதியின் அருளால் புத்தி, பலம், புகழ், தைரியம், அச்சமின்மை, ஆரோக்கியம், அறிவாறறல, சொல்லாற்றல் போன்ற பலப்பல நன்மைகளைப் பெறலாம்.

நரிசிம்மனை நினைத்து யோக ஆஞ்சநேயனாக விளங்கினாலும் நாளும் தன்னை நாடி வந்தவர்களைக் காப்பதை தன் கடமையாகக் கொண்டுள்ளார் ஆஞ்சநேய சுவாமி.

சிரஞ்சீவியான அந்த ராம தூதனின் தலமான சின்னமலை பல மருத்துவ மகிமைகள் அடங்கியுள்ளது. மயங்கி விழுந்த லட்சுமணனுக்காக சிரஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்தெடுத்து வந்த அந்த வாயு புத்திரன்.

சோளிங்கபுரத்தில் மாமருந்து தந்து மன நிம்மதி தரும் மாமணியாக வீற்றிருக்கிறான். ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சந்நிதியில் வலம் வந்த பின் நாம் காண்பது ஸ்ரீ ரங்கநாதர், ஸ்ரீ ராமர், சீதா பிராட்டியுடனும், லட்சுமணனுடனும் கோயில் கொண்டுள்ள சந்நிதிகளை கண்டு தரிசித்து அருள் பெறலாம்.

யோக ஆஞ்சநேயருக்கு ஞாயிற்றுக் கிழமை விசேஷம். கார்த்திகை மாதம் ஒவ்வொரு வெள்ளி, ஞாயிறு தினங்களும் மிக விசேஷம்.

**ஊர்த்திருக்கோயில்**

**(ஸ்ரீ பக்தோசித பெருமாள் திருக்கோயில்)**

சோளிங்கபுரம் பேருந்து நிலையத்தை கடந்து ஊரின் மையப் பகுதிக்குச் சென்றால் நாம் காண்பது அருள்மிகு பக்தோசித பெருமாள் திருக்கோயிலாகும். சந்நிதிக்கு வெளியே கம்பீரமாக காட்சி அளிப்பது நாற்கால் மண்டபம். அதனை அடுத்து எம்பெருமானின் திருத்தேர். அகன்ற பெரிய முன்வாயிலுடன் கிழக்கு நோக்கி கம்பீரமாக உயர்ந்து ஓங்கிய மதிலுடன் பெருமாளின் திருக்கோயில் விளங்கும். ஸ்ரீ பக்தோசித சுவாமியின் அழகிய கோபுர வாயிலைக் கடந்து சென்றால் முதலில் தெரிவது அழகிய பலிபீடம்.

பலி பீடத்தினை தண்டனிட்ட பின் வலமாக வந்தால் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியைக் காணலாம். மலை ஏறி பிரார்த்தனை செலுத்த இயலாதவர்கள் இச்சந்நிதியை 108 முறை வலம் வருதல் மூலம் அப்பயனைப் பெறலாம். இவரது திருநட்சத்திரமான திருவோணம் அன்று சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெறும். ஆனி மாதம் திருவோணம் தனிச் சிறப்புடையது.

வானம் பொய்த்து நீரில்லாது உலகம் வருந்தும் நாளில் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமானுக்கு 1008 குட நீராட்டு செய்தால் மழை மேகம் கூடி மழை பெய்யும் என்பது நம்பிக்கை. இது இன்றும் உண்மை. எதிரே குவித்த கரங்களுடன் கருடனும், சந்நிதியின் இருபுறத்தும் துவாரபாலர்களும் விளங்கும் நிலை மிகவும் அமைதி தருவதாகும்.

அர்த்த மண்டபம் கடந்து பெருமாள் சந்நிதிக்குள் நுழையலாம், அடியவர்களை அழைத்து அபயம் தரும் தோற்றத்துடன் சேஷ வாகனத்தில் சுவாமி தக்கான், ஸ்ரீ தேவி,



பூதேவியுடன் நிற்கும் கோலத்தை காணத் தவம் செய்திருக்க வேண்டும். இவருக்கு தீந்தமிழ்த் திருநாமம் தக்கான் ஆகும். வடமொழியில் பக்தவத்ஸலன் என்பதாகும்.

அருகே ஸ்தல ஆசார்ய புருஷர் சுவாமி தொட்டாச்சார்யாருக்கு தரிசனம் தந்த காஞ்சி தேவப் பெருமாள் ஸ்ரீ தேவி, பூதேவியுடன் விளங்குகிறார். அடுத்து கண்ணன் எம்பெருமான், கருவறையின் இடப்புறத்தே ஆண்டாள் நாச்சியார் சந்நிதியும், அதற்கு கீழ் ஆழ்வார் ஆசார்யர்கள் சந்நிதியும் உள்ளது.

**தல விருட்சம்**


பெரிய மலையில் தல விருட்சம் என எதுவுமில்லை. சிறிய மலையில் அரச மரம் ஒன்று உள்ளது. ஊர்த் திருக்கோயிலில் பாரிஜாத மரம் உள்ளது. இத்தலத்தின் தல விருட்சம் பாரிஜாத மரம் ஆகும்.

**கல்வெட்டு (வரலாற்று குறிப்பு)**

பெரிய மலை மற்றும் சிறிய மலைக் கோயில்களைக் கட்டியது யார், அது கட்டிய காலம் பற்றிய கல்வெட்டுகள், நூல்கள் எதுவும் காணக்கிடைக்கவில்லையாதலால் இம்மலைக் கோயில்களை கட்டிய காலம் மிகவும் தொன்மையானதாக (சுமார் 2000 வருடங்களுக்கு முன்) இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்திய தொல்லியல் கல்வெட்டு ஆய்வுப் பிரிவு கொடுத்துள்ள அறிக்கையின்படி சிறிய மலைக் கோயிலை ஸ்ரீ வீரபிரதாபராம தேவராயர் ஆட்சிக் காலத்திலும், ஸ்ரீ வெங்கடபதி தேவமகராயர் ஆட்சியின் போதும் சகாப்தம் 1527 (கி.பி.1619) நூற்றாண்டில் புதுப்பிக் கப்பட்டதாக கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.

ஊர்த்திருக்கோயில் மற்றும் இப்போதைய சோளிங்கர் கிராமத்தை திட்டமிட்டு உருவாக் கியவர் ஸ்ரீ ஸ்வாமி தொட்டையாசாரியார் என்று கல்வெட்டு கூறுகிறது. ஊர் திருக்கோயில் சர்வதாரி வருடம் மீன மாசம் கந்த பஞ்சமி அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டதாக நூல்களில் இருந்து அறிகிறோம். அது ஆங்கில ஆண்டு 1588 ஏப்ரலுக்கு சரியாக அமைகிறது.



**அபூர்வ மூர்த்தங்கள்:**

சின்னமலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு யோக ஆஞ்சநேயருக்கு நான்கு கைகள். ஒரு கையில் சங்கு, ஒரு கையில் சக்கரம், மற்ற இரு கைகளிலும் ஜபமாலை, ஜப எண்ணிக்கை . இத்தகைய அரிய மூர்த்தி பரத கண்டத்தில் வேறெங்கும் காணக் கிடைக்காத அரிய புதுமைக் கோலமாகும்.


**மகிமை**

இத்திருத்தல புனித தீர்த்தமான தக்கான்குளம் என வழங்கும் பிரம்ம தீர்த்தத்தில் நீராடி பெரியமலை, சிறிய மலைக் கோயில்களுக்குச் சென்று பிரதி தினமும் சுவாமிகளை 108 முறை வலம் வந்து கால் மண்டலம் (12 நாட்கள்), அரை மண்டலம் (24 நாட்கள்), ஒரு மண்டலம் (48 நாட்கள்) என்ற கணக்கில் தங்கி சேவை செய்வோர் எல்லா நலன்களும் பெறுவது இன்றும் கண்கூடாக நடக்கும் உண்மையாகும். சித்தம் பேதலித்தவர்கள், புத்திர பாக்கியம் இல்லாதவர்கள், தீராத நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் பில்லி, சூனியம் போன்றவற்றால் அவதியுறுபவர்கள் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் துயரங்கள் நீங்கி எல்லா நலன்களும் பெறுவர். பூஜை விவரம் - ஆறு கால பூஜை (வைகானஸ ஆகமம்)

தரிசனம் காலம் - பெரியமலை, சிறியமலை திருத்தலங்களில் - காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை - 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை-86
தொலைபேசி: 23450920/28117575

குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம்,
பிரபை, பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்



Thirukovilur
Ulagalanda
Perumal
kavatcham
June 2002

Thejus
24-Ct Gold Platings

94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370.
94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com



பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

# அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.

அ.கு-.எண்.638401 தொலைபேசிஎண்(04295)243289

# 2010 ஆம் ஆண்டு திருக்குண்டம் பெருந்திருவிழா அழைப்பிதழ்

தொல்லுலகில் மானிடரின் தோற்றமொடு தோன்றி வளர்
நல்ல தமிழ் நடைமாறிக் கன்னடமாம் எல்லையிலே
வல்லுருவ யானை வளர் பண்ணாரி பாங்காடே
இல்லிடமாய்க் கொண்டாய் நீ என் தாயே அருள் மாரி
ஓங்கு புகழ் உன்னருளால் உத்தமர்கள் எண்ணற்றோர்
ஈங்குமதிப் பங்குனியில் நற்றிங்கள் நாளினிலே
பாங்காடும் பட்டணம் போல் பண்ணாரி காட்சி கொள்ளும்.

பேரன்புடையீர், வணக்கம்.

நிகழும் திருவள்ளுவர்ஆண்டு 2041 பங்குனித் திங்கள் 1 ஆம் நாள் (15-03-2010) திங்கட்கிழமை முதல் பங்குனித் திங்கள் 22ம் நாள் (05-04-2010) திங்கட்கிழமை முடிய இத்திருக்கோயிலில் திருக்குண்டம் பெருந்திருவிழா பின்வரும் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி நடைபெற உள்ளது.

## 2010ஆம் ஆண்டு குண்டம் பெருந்திருவிழா நிகழ்ச்சிநிரல்

| | | | |
|---|---|---|---|
| 15.03.2010 | பங்குனி1 | திங்கட்கிழமை இரவு | திருப்பூச்சாட்டு விழா |
| 23.03.2010 | பங்குனி9 | செவ்வாய்க்கிழமைஇரவு | திருக்கம்பம்சாட்டு விழா |
| 29.03.2010 | பங்குனி15 | திங்கட்கிழமை இரவு | குண்டம் |
| 30.03.2010 | பங்குனி16 | செவ்வாய்கிழமை அதிகாலை 4.00மணி | பெருந்திருவிழா |
| 31.03.2010 | பங்குனி17 | புதன்கிழமை இரவு | புஷ்ப ரதம் |
| 01.04.2010 | பங்குனி18 | வியாழக்கிழமை | மஞ்சள் நீராட்டுவிழா |
| 02.04.2010 | பங்குனி19 | வெள்ளிக்கிழமை | திருவிளக்கு பூஜை திருத்தேர்விழா |
| 05.04.2010 | பங்குனி22 | திங்கட்கிழமை | மறுபூசைத் திருவிழா |

அன்பர்கள் அனைவரும் வருகை தந்து திருவிழாவினைச் சிறப்புறச் செய்து அன்னை அருள்மிகு பண்ணாரி மாரியம்மனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவண்
திருக்கோயில் நிர்வாகிகள்

இணையதள முகவரி: mail@bannariamman.com , இ.மெயில்: bannari_sty@sancharnet